# கொள்ளைப்பணம் ரூ.10,000 பெற்றுக்கொண்ட பெண்

## பொலிஸ் விசாரணையில்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை ஊறணிப் பகுதியில் ஆறு லட்சத்து எண்பதினாயிரம் ரூபா கொள்ளை முயற்சி முறியடிக்கப்பட்டு இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து நடைபெற்ற விசாரணைகளின் மற்றுமொரு திருப்பு முனையாக கோண்டாவிலைச் சேர்ந்த ஒரு பெண் நேற்று விசார

(8ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 1-00 ★

ஈழநாடு

THE EELANADU

மலர் 24 பங்குனி 5 ஜ. அவ்வல் 21 இதழ் 34

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 18—3—82

பயிற்சி

தொழில்முறைப் பயிற்சியுடன் நடைபெறும்.

0 வயறிங், 0 வெல்டிங்,
0 மோட்டார் இயந்திரவியல்

பயிற்சி வகுப்பிற்கு மாணவர்கள் 20-03-82 வரை சேர்ந்துகொள்ளலாம்.

சி. ஈ. ரி.

ஐலன்ட் இன்ஸ்ரிரியூட்
(விகாரைக்குச், சமீபமாக)
58 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (2578)

# ஊர்காவல்படை மே முதல் இயங்கும்

## மாவட்டக் காவல் குழுக்கள் நியமனங்களை வழங்கும்

### ஜனாதிபதி செயலகத்திடம் அதிகாரம்

(கொழும்பு)

**ஊர்காவல் படைகள் நாடு முழுவதும் மே முதலாம் திகதிமுதல் இயங்கும்.**

ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் ஆயிரம் பேர் இப்படையில் சேர்த்துகொள்ளப்படுவார்கள். இதுபற்றி சகல மாவட்ட அபிவிருத்தி சபைச் செயலாளர்களுக்கும் அறிவிக்கும்படி ஜனாதிபதியின் செயலாளர் திரு. மெனிக்திவல, ஜனாதிபதியால் பணிக்கப் பட்டுள்ளார்,


அரசாங்கத்துக்கும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையே நடைபெற்ற உயர் மட்டப் பேச்சுவார்த்தைகளில் முக்கிய ஒரு விடயமாகவிருந்த ஊர்காவல்படைகள் அமைக்கும் திட்டம் மே முதலாம் திகதி முதல் அமுலுக்கு வருகிறது.

இப்படைகள் மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் கீழ் இயங்கவேண்டுமென்றே தமிழர் விடுதலைக் கூட்டணி கேட்டிருந்தபோதும் இப்படைகள் ஆரம்பத்தில் மறு அறிவித்தல் வரை ஜனாதிபதியின் செயலகத்தின் கீழேயே இயங்கும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அமைச்சர், மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர், அரசாங்க அதிபர், பொலிஸ் அதிபர் ஆகியோர் அடங்கிய 'மாவட்டக் காவல் குழு' அம் மாவட்டத்தின் சகல கிராம சேவையாளர் பிரிவிலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஊர்காவல் படைகளை நியமிக்கும். இப்படையின் காப்பாளராக உதவி அரசாங்க அதிபர்கள் இருப்பர்.

18 வயதுக்கு மேற்பட்ட, தேகாரோக்கியமுள்ளவர்கள், மற்றும் தேவையான தராதரங்களுடன் இப்படையில்

(8 பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் அண்மையில் தமிழ்நாடு சென்றிருந்தபோது, சென்னையில் அவருக்கு தமிழ்நாடு சட்டசபை சபாநாயகர் தலைமையில் அளிக்கப்பட்ட வரவேற்பில் ஏராளமான பரிசுகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. யோகேஸ்வரன் தம்பதிகளுக்கு திரு. ராசாராம் குத்துவிளக்கு களை அன்பளிப்பதை இங்கு காணலாம். முன்னாள் சென்னை ஷெரிப் டாக்டர் பி. எம். றெக்ஸ், தமிழக அரசாங்க கொறடா டாக்டர் இரா. ஜனார்த்தனன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## 'ஒருநாள்' சிசுவைக் கடத்திய 'மர்மப் பெண்ணை' பொலிஸார் தேடுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

''மேல்வீட்டில் உமது குழந்தைக்கு ஊசிபோடவேண்டும்'' என்று ஒருபெண் சொல்லிக்கொண்டு, எனது பெண்குழந்தையை எடுத்துச் சென்றார். அப்பெண் வெள்ளைச்சட்டையுப் சேலையும் அணிந்திருந்தார். கழுத்தில் தாலிக்கொடி தெரிந்தது. அவருக்கு 25 வயதிருக்கும்.

இவ்வாறு யாழ். ஆஸ்பத்திரி பிரசவ வார்ட்டில் ஒருநாள் வயது பெண் சிசுவைப் பறிகொடுத்த திருமதி புவனேஸ்வரி யோகராசா (22வயது) கண்ணீரும் கம்பலையுமாக தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி பிரசவ வார்ட்டில் நேற்றுமுன் தினம் காலை 10 30 மணியளவில் இச்சிசுமர்மமான முறையில் மறைந்தது 'ஈழநாடு' வாசகர்கள் அறிந்ததே.

திங்கட்கிழமை 15ம் திகதி காலை 9-04 மணிக்கு பிறந்த இச்சிசு அடுத்தநாள் காலை 10—30 க்கு கடத்தப்பட்டதாக பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கட்டுவன் மேற்கைச் சேர்ந்த புவனேஸ்வரி ஒருவருடத்துக்கு முன்னர்தான் திருமணம் செய்திருந்தார். பிரசவத்துக்காக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட புவனேஸ்வரிக்கு உதவியாக பிரசவ வார்ட்டில் அவரது மாமியாரும் துணைக்கிருந்தாராம்.

''டாக்டர் வார்ட்டுக்கு வரப்போகிறார்; வெளியில்போய் நில்லும்'' என்று அந்த மர்மப் பெண்கூறி, சிசுவைக் கடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. அன்று காலை மூன்று தடவை இப்பெண் அச்சிசுவை வந்து பார்த்துச்சென்றாராம்.

குழந்தைக்கு ஊசிபோட வேண்டும் என்று கூறி சிசு கடத்தப்பட்டதும் ஆஸ்பத்திரி அனுபவம் இல்லாத அந்தப் பெண், குழந்தை வரும்வரும் என்று காத்திருந்தாராம் அதிகநேரமாகியும், குழந்தையையும், அப்பெண்ணையும் காணாது தவித்த சிசுவின் தாய், அந்தவார்ட்டிலுள்ள தாதிக்கு முறையிட்டபொழுதே 'சிசு களவாடப்பட்டது தெரியவந்தது!

யாழ். பெரியாஸ்பத்திரியில், அதுவும் பிரசவ வார்ட்டில், பொதுமக்கள் (பார்வையாளர்

(8—ம் பக்கம் பார்க்க)

### இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று மாலை கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (மா)



யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருக்கும் பிரபல தொலைக்காட்சி நிறுவனமான மற்சுசிற்ரு எலகரிக் கம்பெனியான தொழில்நுட்ப நிபுணர்கள், தங்கள் யாழ். ஏஜண்டுகளான வி. கே. இராசரத்தினம் நிறுவனத்துக்கு விஜயஞ்செய்தபோது உரிமையாளரும் மற்றும் ஊழியர்களும் ஜப்பானிய நிபுணர்களுடன் நிற்பதை இங்கு காணலாம்.

COMPUTERS

கொம்பியூட்டர்களில் உங்களுக்கு ஆர்வமிருக்குமானல் வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரியில் நிகழும் தொழில்நுட்ப, விவசாயக் கண்காட்சியில், **டி. எம். எஸ். இலெக்ரேனிக்ஸ் லிமிற்றெட்** ஸ்தாபனத்தாரின் பகுதிக்கு வந்து, கொமோடோர் கொம்பியூட்டர்களைக் (Commodore Microcomputers) காணுங்கள். எப்படி கொம்பியூட்டர்கள் உங்கள் வியாபாரத்துக்கு, கல்விக்கு மற்றும் துறைகளுக்கு உதவுமெனக் காணலாம்.

நாஷுவா சாதாரண தாளில் பிரதிசெய்யும் இயந்திரங்களையும் (Nashua Plain Paper Copiers) இங்கே காணலாம்.

கொழும்பு முகவரி:

**106; கின்ஸி வீதி, கொழும்பு-8.**

(2567)

### மணிவாக்கு

உறுதியான மலைக்குன்றானது கடுங்காற்றினுல் அசைந்து விடுவதில்லை; அதேபோல் புகழ்ச்சியின் போதும் இகழ்ச்சியின் போதும் அறிவாளி ஒரே நிலையில் இருக்கிருன்.

—தர்மபதம்

# நமது நோக்கு

## ஊறணி இளைஞர் நாட்டுக்கோர் ஊருணி

யாழ்ப்பாணத்தைப் பிடித்தாட்டும் 'சனியன்' நீங்கும்காலம் அணுகுகிறதென நம்ப நல்ல சம்பவங்கள் நடைபெறுகின்றன. அரசு அமைத்துவரும் திருத்தச் சட்டங்கள் காரணத்தாலல்ல.

காங்கேசன் துறையில் 'ஊறணி' என்ற கிராமத்தில் நாடனைத்துக்கும் வரலாற்றுச் சாதனைக்கிடமான சம்பவம்நிகழ்ந்திருக்கிறது.

ஊறணி கிராமஅபிவிருத்திச் சங்கத்தின் தொழிலாளர் சம்பளப்பணமானஏழு லட்சரூபாவைக் கொள்ளையடிக்க முயன்ற ஆயுதந்தாங்கிய கொள்ளையரை ஊறணி இளைஞர்கள் ஓடி மடக்கிப் பிடித்த வீரச் செயல் நாடனைத்துக்கும் முன்மாதிரியாக விளங்கும்.

'சமூக விரோதிகளை'ப் பிடிக்க உதவிய வீர இளைஞர்களை புதிய பொலிஸ்மா அதிபர் ''Well done'' என்றுபாராட்டியிருக்கிருர். நாம் இவர்களை 'ஊருணி' என்று பழந்தமிழில் புகழ்மாலை சூட்டுவதில் மகிழ்ச்சியடைகின்ருேம்.

வரட்சியால் வாடும்நாட்டுக்கு மழைபெய்து ஊருணி நிறைந்தால் ஊரார் எல்லாம் களிக்கூத்தாடுவார்கள்.

கொள்ளையால் பீடிக்கப்பட்டிருக்கும் இந்த நாட்டுக்கு அவசியம் தேவையானது இத்தகைய தீர இளைஞர்களே! பட்டினி, தாகம் மனிதனை வாட்டினுலும் பயமில்லாது வாழலாமென்பதை 'ஊறணி' இளைஞர்கள் உறுதிப்படுத்தியிருக்கின்றனர்.

இக்கொள்ளை முயற்சியில் இன்னும் இரண்டு கருத்துக்கள் கவனத்துக்குரியவை.

முதலாவது: பொதுப் பணத்தைக் கொள்ளையடிப்பதால் தனியாரைத் துன்புறுத்துவதில்லை என்ருெரு வியாக்கியானம் இருந்துவந்தது; அத்துடன் அவ்வித பணம் அரசியல் புரட்சி வேலைகளுக்கு பயன்படுத்துவதென்பதே!

இன்று யாழ்ப்பாணத்திலாவது இந்தப் போலி நம்பிக்கை தகர்த்தெறியப்பட்டுவிட்டது. பொலிஸாருடன் பொதுமக்கள் என்றுமே ஒத்துழைக்கத் தயாராகவிருக்கின்றனர். புதிய பொலிஸ்மா அதிபர் பொறுப்பேற்ற சுபமுகூர்த்தம் இவ்வித சாதனைக்குகந்ததாயிருக்கலாம். நாம் அவரின் திறமையிலும் நேர்மையிலுமே நம்பிக்கை கொண்டிருக்கிருேம்.

இரண்டாவது: பயங்கரவாதமென்ற ஆதரவில் பயங்கரகொள்ளைகள் நடைபெறுகின்றன என்பதும் ஒரு மூடநம்பிக்கையென்று நிரூபிக்கப்பட்டுவிட்டது

பயங்கரவாதம் மக்களைக் கெடிக்கலக்கவதுஇயற்கை. இதனைப் பயன்படுத்தி பொதுநலப் பணத்தைக் கொள்ளையடிக்கும் கூட்டத்தினர் 'அசல்' கொள்ளைக்காரரர், சமூகவிரோதிகள். இவர்களை எவரும் ஆதரித்தால் தினசரி வாழ்வே பாழாகும்; நாட்டின் ஆட்சி சூனியமாகும்.

இச்சம்பவத்தின் இன்னுெரு முக்கிய அம்சம் கொள்ளையை எவ்வாறு தடுக்கமுடியுமென்பதை விளக்குகின்றது.

சங்கத்தலைவர் மரியாம்பிள்ளையின் நுண்மதி இதற்கொரு எடுத்துக்காட்டாகும். பணத்தை வங்கியில் இருந்து கொண்டுவந்த தலைவர் 'நெல்லும் புல்லும்' என்று இரு பைகளைப் பயன்படுத்தியதால் கொள்ளையர் இழுபறிப்பட்டது போலிப்பையுடனேயே அவருடைய விவேக ஏற்பாடு வெற்றிக்கு மூலமாயிருந்தது.

பொதுநலப் பொறுப்பில் ஈடுபடும் அனைவருக்கும் இவ்வித சிந்தனைச் சிறப்பு அத்தியாவசியமாவதை இச்சம்பவம் தெளிவுபடுத்துகின்றது.

அன்ருெரு மனமுடைந்த அமைச்சர் கூறியதுபோல் எங்கும் எல்லா இடங்களிலும் வங்கிகளிலுமே பயங்கரவாதிகள் இடம்பிடித்துவிட்டார்களென்று நாம் மனக்களைப் படையாமல் இந்த வீர நாடகத்தின் கதாநாயகர்களை முன் வைத்து நாட்டையும் நம்முடைய சமூகத்தையும் பேணிக்காக்க இளைஞர் உலகம் முன்வருமென்பது எமது அசையாத நம்பிக்கை.

பயங்கரவாதமோ அல்லது கொள்ளையோ எங்கும் என்றும் இருக்கப்போகிறதென்று இன்னுெரு அமைச்சர் கூறியதை நாமொருபோதும் ஆமோதிக்கவில்லை. அவசர திருத்தச் சட்டங்களை செயற்படுத்தவே அவ்வாறு கூறினுர் அவர்.

துரத்திப்பிடிக்க இலட்சியவாதிகளான வீர இளைஞர்கள் இங்கு இருக்கின்றனர். பயங்கரவாதத்தைத் தடுக்க அரசு அடிப்படைக் காரணங்களை ஆராயமுயலுமா?

## மீனவரிடையே மோதல்

(பச்சிலைப்பள்ளி)

ஆனையிறவுக் கடலில் இருல் பிடிக்கின்ற இரு மீனவ கோஷ்டிகளுக்கிடையே மோதல் ஏற்பட்டுள்ளது என்றும் இதனைத் தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்கும்படி பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், பளை உதவி அரசாங்க அதிபர் திரு, சு. முருகவேளைக் கோரியுள்ளார்.

இம் மோதலை அடுத்து அங்கு தொழில் செய்வோரின் தொகை குறைந்துள்ளதுடன் பதட்டநிலையும் காணப்படுகிறதாகக் கூறப்படுகிறது

## இருவர் பலி

சென்னை, மார்ச் 17

கன்னியாகுமரி மாவட்டத்தில் கும்பலொன்றைக் கலைக்க பொலிசார் சுட்டதில் 2 பேர் பலியானதாக அறிவிக்கப்பட்டது.

# "தீர்க்கதரிசனத்துடன் பணியாற்றினுர்" அமரர் ஸ்ரீகாந்தாவுக்கு அஞ்சலி

### முன்னைநாள் உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. வீ. சிவசுப்பிரமணியம்

அமரர் திரு. ஸ்ரீகாந்தா தமிழ் மக்களின் முன்னேற்றத்துக்காக தீர்க்க தரிசனத்துடனும் கூரிய மதிநுட்பத்துடனும் பலதுறைகளில் தொண்டாற்றிய பெரியார். அவர் வடமாகாண அரசாங்க அதிபராகப் பதவி வகித்த போது அவரால் வித்திடப்பட்ட காணி அபிவிருத்திட்டங்கள் குடியேற்றத்திட்டங்கள் முதலியவை இவ்வுண்மையை நிரூபிக்கின்றன. அவருடைய அயரா முயற்சியினதும் துரதிருஷ்டியுள்ள திட்டத்தினதும் பயனுகவே அன்று காடுகளாக இருந்த பல்லாயிரம் ஏக்கர் காணிகள் நெல் விளையும் களனிகளாக இன்றுவிளங்குகின்றன. பிற இனத்தவரின் குடியேற்றங்கள் அங்கு ஏற்படாதவாறு அப்பகுதிகளில் தமிழ்ப் பேசும் மக்களைக் கொண்ட குடியேற்றத்திட்டங்களை உருவாக்குவதிலும் கண்ணுங் கருத்துமாக முன்னின்றுழைத்தவர் அவர். இதற்காகத் தமிழ் மக்கள் அவரை என்றும் நினைக்கக் கடமைப்பட்டவர்கள்.

பெரிய பணிகளை எல்லாம் செய்து முடித்த அமரர் ஸ்ரீகாந்தா அப்பணிகளைப் பற்றி ஆரவாரத்தையோ விளம்பரத்தையோ செய்து கொள்ள விரும்பாமல் அடக்கத்தின் சின்னமாகத் திகழ்ந்தார். பலனை எதிர்பாராமல் கடமையைச் செய்து முடித்த கர்ம வீரராக அவர் விளங்கினுர், வட இலங்கை மக்களில் ஒரு பகுதியினர் ஆலயங்களுக்குள் சென்று வழிபடமுடியாத நிலைமை நிலவியது. ஆண்டவன் முன்னிலையில் அனைவரும் சமம் என்ற உன்னத இலட்சியத்தைக் கொண்டிருந்த அவர் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல ஆலயங்களின் கதவுகளை சமத்துவ வழிபாட்டுக்காகத் திறக்கச் செய்வதில் அயராதுபாடுபட்டார். எதிர்ப்புக்களைக்கண்டு அஞ்சி ஒதுங்கிவிடாமல் எடுத்த கடமையைச் சிறப்பாக ஆற்றி முடிக்கும் அஞ்சா நெஞ்சம் அவரிடம் இருந்தது. இதற்குத் துணையாக இறைவனின் திருவருள் மீதும் தமது குருவான மகான் யோகர் சுவாமிகளின் வழிகாட்டுதலின் மீதும் அசையாத நம்பிக்கை அவருக்கு இருந்தது.

எமது தலைமுறையின் கண்கண்ட மகானுக ஞான புருஷராக விளங்கிய குருநாதர் யோகர் சுவாமிகளின் பூரண கிருபா கடாட்சத்துக்குப் பாத்திரமான பிரதான சீடராகவும் அமரர் ஸ்ரீ காந்தா விளங்கினுர். இதன் காரணமாகவும் இயல்பிலேயே சைவத்தின் மீது மிகுந்த பற்றுள்ளவராக இருந்தமையாலும் சைவ எழுச்சிக்காக பல பணிகளை அவர் ஆற்றினுர். ஆலயப்புனருத்தாரணப்பணிகள் தேர்த்திருப்பணிகள் இராசகோபுரத் திருப்பணிகள் முதலியவற்றை ஊக்குவித்து நிறைவேற்றுவிப்பதில் உற்சாகமாக ஈடுபட்டார். சிவதொண்டன் நிலையம்சேக்கிழார்மன்றம் போன்ற அமைப்புகளை நிறுவி, சைவத் திருமுறைகள், புராணங்கள், நற்சிந்தனைகள் முதலியவற்றைப் பரவச் செய்தார்.

சைவத்தையும் தமிழையும் மறுமலர்ச்சியுறச் செய்த நாவலர் பெருமானுக்கு 1969ல் நல்லூரில் திருவுருவச்சிலை நிறுவப்பட்டது இதையொட்டி சிலையின் தேசபவனி, பத்து நாள் மாநாடு எனப் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றது வரலாறு. இச் சரித்திர முக்கியத்துவமான நிகழ்ச்சியைச் சபை நடத்துவதற்கு அதன் பொதுச்செயலாளராக விளங்கிய திரு. ஸ்ரீகாந்தா அயராது உழைத்தவர். நல்லூரில் பல லட்ச ரூபாவில் நாவலர் மணிமண்டபம் எழுப்புவதிலும் மற்றும் நாவலர் சபையின் எல்லாப் பணிகளிலும் மூலவேராக இருந்து செயலாற்றியவர் அவர். அவரின் திடீர் மறைவு எமது சபைக்குப் பேரிழப்பாகும். தமிழ்ச் சமூகத்துக்குப் பெரும் நஷ்டமாகும். அவரின் மறைவினுல் ஏற்பட்ட இடைவெளியை எவராலும் நிரப்ப இயலாது. அவர்கொண்டிருந்த இலட்சியங்களையும் நோக்கங்களையும் நிறைவேற்றுவதே அவர் நினைவுக்கு நாம் செலுத்தக்கூடிய அஞ்சலியாகும்.

### சைவ முன்னேற்றச் சங்கத்தலைவர் திருமதி டாக்டர் சிவயோகம் ஸ்ரீஸ்கந்தராசா:

எனது தந்தையாரும் அமரர் ஸ்ரீ காந்தாவும் ஆலயக்கதவுகளைச் சமத்துவ வழிபாட்டுக்குத் திறந்து விடுவதில் முன்னணியில் நின்றுஒருங்கிணைந்து செயலாற்றினர். அமரர் ஸ்ரீகாந்தா எல்லோரையும் சமமாக மதித்து எல்லோரிடமும் அன்பு பூண்டிருந்த சிறந்த சைவப்பெரியார் எனச் சொன்ஞர்.

### "இராமகிருஷ்ணன் மிசன் இலங்கைக் கிளை முதல்வர் சுவாமி பிறேமாத் மாநந்தாஜி:

''அமரர் ஸ்ரீ காந்தா இராமகிருஷ்ண மிசன் முகாமைச் சபையின் உறுப்பினராக இருந்து மிசனின் வளர்ச்சிக்காக நற்பணி புரிந்தவர். மிசனின் மட்டக்களப்புக் கிளையின் வளர்ச்சிக்காக பல நூறு ஏக்கர் நிலங்களை வழங்கியவர். அந்நிலத்தின் வருவாயைக் கொண்டு இன்று பல அநாதைச் சிறுவர்களுக்கு மிசன் உணவளித்து வருகின்றது. இத்தகைய சேவையை செய்தவர் இந்த மகான்.

### திரு.சி.ஈ.பி. ஜயசூரியா-சி. சி. எஸ்.

கொழும்புப் பல்கலைக்கழகம் 1930—40 ம் ஆண்டுகளில் நாட்டின் பல பாகங்களிலுமிருந்து சிறந்த திறமையுடனும், புலமைப்பரிசில்கள் பெற்றுவந்த மாணவர்களை உள்ளடக்கியிருந்தது. யாழ். குடாநாட்டிலிருந்து வந்த ஸ்ரீகாந்தாவும், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஒரு உன்னத படைப்பாவார்.

கல்விமீது கொண்டிருந்த பிரியத்தினுலும், ஆழ்ந்த சமய அடிப்படையில் வாழ்க்கையை நடத்தியமையாலும், நம்மவரது கவனத்தையும், மதிப்பையும் ஸ்ரீகாந்தா பெற்றிருந்தார்.

பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட ஸ்ரீகாந்தா பின்னர் சிவில்சேவைப் பரீட்சைக்குத் தோற்றி, அப்போட்டிப் பரீட்சையில் குறிப்பிடத்தக்கவகையில் தேர்ச்சி பெற்று சகலரையும் வியப்படையச் செய்தார்.

தனது அன்பினுலும், சிக்கனமான வாழ்க்கை முறையினுலும், பெருந்தன்மையினுலும் சிவில்சேவையில் உன்னத இடத்தை ஸ்ரீகாந்தா பெற்றிருந்தார். பதவியும், வல்லமையும் அவரை இறுமாப்படையச் செய்யவில்லை.

நாமிருவரும் தொழில் திணைக்களத்தில் கடமையாற்றிய போது, அன்னியோன்யமாகப் பழகச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஸ்ரீகாந்தா உதவி ஆணையாளராக ஹட்டனில் கடமையாற்றினுர். நான் பதுளையில் கடமையாற்றினேன். அக்காலங்களில் அவரை அடிக்கடி நான் சென்று சந்தித்து ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் கேட்டு வந்தேன்.

ஸ்ரீகாந்தா அவர்கள் பதுளையில் இருந்தபோது தோட்டத் தொழிலாளரது பிரச்னைகளில் அதிக அக்கறை காட்டிவந்தார் அவர்களது தொழிற்சங்க அலுவல்களில் சிரத்தை காட்டியதுடன் அவர்கள் மீது ஆழந்த அனுதாபம் கொண்டு ஆதரவும் வழங்கிவந்தார்.

ஸ்ரீகாந்தா வாழ்ந்த சிக்கன வாழ்வும், கொண்டிருந்த உயர்ந்த சிந்தனைகளும், திடமான கொள்கைகளும் அவரது சகாக்களது நன்மதிப்பைப்பெற உதவியதுடன், புகழையும் தேடிக்கொடுத்தது.

அரசாங்கங்கள் மாறி, மாறி வந்தபோதிலும், பிரச்னைகள் ஏற்பட்டிருந்த வேளைகளிலும் ஸ்ரீகாந்தா அவர்கள் தன்னம்பிக்கையுடன் உறுதியாகக் கடமையாற்றியமையால் மிகப் பொறுப்புவாய்ந்த பதவிக்கு நியமிக்கப்பட்டார். தனது கடமைகளையும், பொறுப்புக்களையும், மிக அவதானமாகவும் திறமையாகவும் கையாண்டதனுல் சகலருடைய பெரும் மதிப்பையும் இவர் பெற்றிருந்தார்.

ஸ்ரீகாந்தா தனது நாட்டுக்கும், மக்களுக்கும், தாம் ஏற்றுக்கொண்ட பணிகளை மிகத் திறமையாக ஆற்றினுர், இவரத சேவையை நன்கு அனுபவித்த சகலரும் இவரை உண்மையில் ஓர் நல்ல மனிதராகவே நினைவு கூருவர்.

[கி]

### பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன், துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திரு. ஸ்ரீகாந்தா அவர்களின் மறைவினுல் அரிய நண்பனை இழந்து தவிக்கின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து அபிவிருத்திச் சிந்தனையாகவே அவரின் இறுதிக்காலம் இருந்தது.

எமது பல்கலைக்கழகப் பேரவையின் உறுப்பினராக 1979ம் ஆண்டு மூன்று ஆண்டுகளுக்கு அவர் நியமிக்கப்பட்டார். அப்பதவிக்காலத்தில் அவரிடம் கண்ட செயற்பாட்டு ஆற்றலினையும் தொண்டினையும் மதித்து 1982ம் ஆண்டிலிருந்து மீண்டும்மூன்று ஆண்டுகளுக்கு பேரவையின் உறுப்பினராகப் பல்கலைக்கழக ஆணைக்குழு அவரை நியமித்தது.

பேரவையின் உறுப்பினராக இருந்த காலத்தில் பேரவையினதும் அதன் பல்வேறு குழுக்களினதும் பயனுடைய செயற்பாட்டுக்கு அவர் மிகப் பெருமளவில் தமது பங்களிப்பைச் செய்தார். பேரவையின் நடவடிக்கைகளில் தமதுபரந்த அனுபவத்தையும், முனைப்பான மனிதப் பண்பையும், இயல்பான அர்ப்பன உணர்வையும் வெளிக்காட்டி அதன் தீர்மானங்களின் மீது தமது கருத்தைப்பதியச் செய்தார். பேரவையின் கூட்டங்களின் போது வேறுபட்ட கருத்துகள் பரிமாறப்படும் வேளையில் அவற்றை இசைவுபடுத்துவதற்காகக் கடும் முயற்சி கொண்டார். இப்பல்கலைக்கழகத்தின் திட்டமிடலிலும் அபிவிருத்தியிலும் சிறப்பான அக்கறை கொண்ட அவர், வாழ்க்கையின் இறுதித்தறுவாயிற் பல்வேறு பீடங்களின் கட்டிடத்திட்டங்கள் மீது தனியான அக்கறை காட்டினுர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஏனைய பல்கலைக்கழகங்களிலும் சிறந்த பல்கலைக்கழகமாக விளங்கவேண்டுமென விரும்பினுர். பல்கலைக்கழகத்

[7ம் பக்கம் பார்க்க]

# கன்னியாகுமரி மாவட்டம்: அமைதி நிலவுகிறது

சென்னை மார்ச் 17

கன்னியா குமரி மாவட்டத்தில் சகஜ நிலைமை திரும்பி அமைதி நிலவுவதாக திருநெல்வேலி மாவட்ட ஆட்சி மன்றத்தலைவர் தெரிவித்தார். போதியபொலிஸ் பாதுகாப்பு அப்பகுதியில் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக கன்னியா குமரி மாவட்ட பொலிஸ் சுப்பிரிண்டன் பரசுராமன் தெரிவித்தார்.

144 தடை உத்தரவு அமுலில் இருப்பதால் ஊரடங்குச் சட்டம் அவசியமில்லையென்றும் அவர் தெரிவித்தார், கடலோரங்களிலுள் மீனவர்களுக்கு பொலிஸ் பாதுகாப்புடன் உணவு, குடிநீர் வழங்கப்படுவதாகவும் வர்த்தக நிலையங்கள் யாவும் வழமைபோல் திறந்து வியாபாரம் நடைபெற்றுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பாரத சோஷலிஸ்ட் இயக்க செயலாளர் திரு. எம். ஆர். காந்தி உட்டபட 40பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பிரனேஸ் தெரிவித்தார். [க]

# உண்ணுவிரதமிருந்த 100 பெண்கள் கைது!

புதுடில்லி மார்ச் 17

ஆஸாமில் நடந்துவரும் கிளர்ச்சியையொட்டி உண்ணுவிரதமிருத்த 100 பெண்கள் பொலிஸாரினுல் கைதுசெய்யப்பட்டனர்.

பிரம்மபுத்திராவில் பெண்கள் இரண்டாவது நாளாக ஊர்வலமாக சென்று உண்ணுவிரதம் இருந்தபோது பொலிஸார் அவர்களைக் கைது செய்தனர்.

தடை உத்தரவை மீறிய தாலேயே பெண்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாநிலம் முழுவதும் அமைதி நிலவுவதாக அரசு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. [க]

# பாஸ்கரா-2லிருந்து புதிய தகவல்கள்

மாஸ்கோ, மார்ச் 17

கடந்த நவம்பர் 20ல் விண்வெளியில் செலுத்தப்பட்ட ''பாஸ்கரா — 2'' நிலையத்திலிருந்து இந்தியப் பிரதேசம் மற்றும் அதையடுத்து கடல் பிரதேசங்கள் குறித்து ஆயிரத்துக்கு மேற்பட்ட புகைப்படங்கள் கிடைத்துள்ளன. ''ஆர்யபட்டா'', ''பாஸ்கரா'' ஆகியவற்றைப் போலவே ''பாஸ்கரா — 2'' செயற்கைக்கோளும்சோவியத் விண்வெளி நிலையத்திலிருந்து பூமிக்கு அருகேயுள்ள சுழற்பாதையில் செலுத்தப்பட்டன.

''விண்வெளி ஆராய்ச்சியில் சோவியத் — இந்திய விஞ்ஞானிகள் ஒத்துழைப்பின் விளைவாக ''பாஸ்கரா—2'' புறவெளியில் வெற்றிகரமாக இயங்கி வருகிறது'' என்ற சோவியத் விஞ்ஞானக் கழகத்தின் கீழ் இயங்கி வரும் ''இன்டர்காஸ்மாஸ்'' கவுன்சிலின் துணைத்தலைவர் திரு. நித்கொலாய் நோவிகோவ் கூறினர்.

''கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக விண்வெளியில் இயங்கி வரும் ''பாஸ்கரா2'' ஏராளமான தகவல்களை அனுப்பியுள்ளது. இந்தியப் பொருளாதாரத்தில் பல்வேறு துறையைச் சார்ந்த நிபுணர்களுக்கு அவை மிகவும் பயன்படும். ''பாஸ்கரா — 2''ன் பயணத் திட்டத்தை நிறைவேற்றியதில் நம்மிரு நாடுகளிடையே வெளிப்பட்ட பரஸ்பர இயக்கமும், நட்புறவும், ஒத்துழைப்பும் குறிப்பிடத்தக்கன'' என்று திரு. நோவிகோவ் கூறினர்.

## நேத்தாஜி வரலாற்றின் சிறந்தமனிதர்

புதுடில்லி மார்ச் 17

பாரத வரலாற்றில் தலைசிறந்த மனிதராக நேதாஜி விளங்கினர் என்று நூல் வெளியீட்டு விழாவொன்றில் பாரத பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்தார்.

நேதாஜி சுபாஸ்சந்திர போஸ் பற்றிய ஹிந்துநூல் பதிப்பு புதுடெல்லியில் வெளிடப்பட்டது.

இவ்விழாவில் பாரத பிரதமர் மேலும் பேசுகையில் இந்திய விடுதலை போராட்டத்தில் நேதாஜி தலைமை தாங்கி இயக்கத்தின் பணிபற்றி அனைவரும் நன்கு அறிந்திருப்பதாகவும் கூறினர். (க[

## புதுடில்லியில் ஜெர்மன் அமைச்சர்

புதுடில்லி மார்ச். 16

உலகம் சமாதான மயமாக்கப்படவேண்டு மென்பதையே சகல நாட்டு மக்களும் விரும்புவதாக, பாரதத்திற்கு விஜயம் செய்த ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு கலாச்சார அமைச்சர் திரு. கொச்மன் புதுடில்லியில் நிருபர்கள் மத்தியில் தெரிவித்தார்.

திரு. கொக்மன் பாரதராஷ்டரபதி திரு. சஞ்சீவரெட்டியைச் சந்தித்தார். (கி)

# கயிலாயபிள்ளையார்கோவிலடி கொலைவழக்கில்எதிரிவிடுதலை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கைலாயபிள்ளையார் கோவிலடி கொலை வழக்கில், விசாரணை முடிவில் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. இவ்வழக்கில், 1981 ஜூலை 30ம் திகதி அருளானந்தம் திருநாவுக்கரசு என்பவரை கைலாச பிள்ளையார் கோவிலடியில் வைத்து அதே இடத்தைச் சேர்ந்த வை. வைகுந்தவாசன் (ராதா) என்பவர் கிறிஸ்கத்தியால் குத்தி கொலைசெய்தார் எனக்குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் சட்டத்தரணி ஜிம்மி ராசரத்தினம் ஆஜராணர்.

நீதவான் திரு. ரி. ஜோகநாதன் தீர்ப்பில் தெரிவித்துள்ளதாவது: இறந்த திரு, நாவுக்கரசுவுடன் 1மணித்தியாலத்துக்குள் இரண்டரைப் போத்தல் சாராயம் அருந்தினர்கள். பின்புகைலாச பிள்ளையார்கோவிலுக்கு அண்மையில் வசித்த மனோகரன் என்பவரை விடுவதற்கு கைலாய பிள்ளையார் கோவிலடியில் இரவு 8.30 மணிக்குச்சென்று அங்கு மகேந்திரனுக்கும் எதிரிக்குமிடையில் நடந்த ஒரு பிரச்னைக்கு சமாதானப்பேச்சு நடாத்த திட்டமிட்டனர்.

மனோகரனும், எதிரியை முன்பின் தெரியாத அன்ரன் யோசேப்பும் கைலாச பிள்ளையார் கோவிலுக்கு 100 யாருக்கப்பால் வசித்த எதிரி வீட்டுக்கு சென்று தனது குடும்பத்துடன் இருந்த எதிரியை அழைத்தார்கள்,

மற்ற சமாதானப்பேச்சாளர்கள் கைலாச பிள்ளையார் கோவிலடியில் பொறுமையுடன் எதிரியின் வருகையைக் காத்திருந்தனர், எதிரி ஏனையவர்களுடன் அவ்விடத்துக்கு வந்த பொழுது எதிரியின் கன்னத்தில் இறந்தவர் அறைந்தார். அதன்பின் மனோகரனுக்கும் எதிர்க்குமிடையில் ஏற்பட்ட பிரச்னை சம்பந்தமாக ஏசினுர்.

எதிரி கன்னத்தில் அறைந்தார். உடனே பிரச்னைக்கு உட்பட்ட மகேந்திரனும் எதிரியை அடித்தார். அதன் பின் எதிரி இறந்தவரை கிறிஸ்கத்தியால் குத்திவிட்டு ஓடிவிட்டார்.

இவ்வழக்கை உயர் நீதிமன்றுக்கு அனுப்புவதற்கு திருப்திகரமான சாட்சியங்கள் [illegible]ருக்கின்றனவா என்று மன்று ஆராயவேண்டும்.

வீட்டிலிருந்த எதிரியை சம்பவதினம் சாட்சிகள் வலிய சண்டைக்கு அழைத்தார்கள், சாட்சிகள் சம்பவம் நடந்த தினம் மதுபோதையில் மூழ்கிக் கிடந்தார்கள். எதிரி எங்கிருந்து கிறிஸ்கத்தியைப்பெற்றுர் என்ற விஷயத்தில் அன்ரன் யோசேப்பின் சாட்சியத்துக்கும்மகேந்திரனுடையசாட்சியத்துககும் இடையில் முரண்பாடுஉண்டு. மகேந்திரன் சாட்சியத்தின்படி எதிரி வீட்டுக்குப்போய் திருப்பி வரும் பொழுது கத்தியுடன் வந்தார். அன்ரன யோசேப்புவின சாட்சியததின்படி எதிரி தனது தம்பிமார் கொ[illegible]த கத்தியை மடியில் செருகியிருந்தார்

அடிவேண்டிய பின்மடியிலிருந்து எடுத்துசகுத்தினர். அன்ரன் யோசேப்பு அன்று கண்டவற்றை மகேந்திரன் [illegible]ணவில்லை.

அங்கு கூடியிருந்தவர்கள் அவர்களுக்கு [illegible] எறிந்தும் அவர்களுக்குக் காயங்கள் ஏற்படவில்லை மதுபோதையி

(5ம் பக்கம் பார்க்க)

## கிரிக்கெட் டெஸ்ட்:

# பாகிஸ்தான் 8-210

இஸ்லாமாபாத் மார்ச் 17

இலங்கை கிரிக்கெட் கோஷ்டிக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே பாகிஸ்தானில் நடைபெற்று வரும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட்டின் மூன்ருவது நாளான செய்வாய்க்கிழமை பாகிஸ்தான் கோஷ்டி தனது முதலாவது இன்னிங்சில் 8 விக்கட்டுகளை இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இலங்கை கோஷ்டியைச் சேர்ந்த டி. எஸ். டி. சில்வா 3 விக்கட்டுகளையும் அஜித் டி சில்வா 2 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்

இலங்கை கோஷ்டி தனது முதலாவது இன்னிங்சில் சகல விக்கட்டுகளையும் இழந்து 454 ஓட்டங்களை எடுத்திருந்தது தெரிந்ததே. [வெ]

# ஐரோப்பாவிலுள்ள ஏவுகணைகளை சோவியத் முடக்கிவைக்கத் தீர்மானம்

லண்டன் மார்ச் 17

ஐரோப்பாவிலுள்ள ஏவுகணைகளை முடக்கி வைப்பதென்றும் சோவியத் நடவடிக்கைகளினுல் அதிக பலன் கிடைக்கப்போவதில்லை என்றும்மேற்குஜெர்மன்,பிரிட்டிஷ் வட்டாரங்கள் தெரிவித்தனர்.

சோவியத்தின்இந்தமுடிவை மேற்கு ஜேர்மனும் பிரிட்டனும் வரவேற்கவில்லை. இது சோவியத்தின் ராஜதந்திரமாக இருக்கலாம் என அந்நாடுகள் கருதுவதாக கூறப்படுகிறது.

இதே சமயம் ஐ. நா. பிரதம செயலாளர் சோவியத்தின் இந்த முடிவை வரவேற்றுள்ளார். [க]

# நிக்கரகுவாவில் நெருக்கடி நிலை!

லண்டன், மார்ச். 17

மத்திய அமெரிக்க நாடான நிக்கராகுவாவில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கெரிலாக்களால் இருபாலங்கள் தகர்க்கப் பட்டதைத் தொடர்ந்தே இந்நிலைமை ஏற்பட்டதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

பாலங்கள் தகர்ப்பு தொடர்பாக மேலும் விபரங்கள் எதுவும் உடனடியாக வெளியிடப்படவில்லை. பாலங்கள்தகர்ப்பு இடம்பெறுமுன்னர்,அதுபற்றி தகவல்வெளியிட்டது தொடர்பாக, தகவல் நிலையமொன்று மூடப்பட்டுள்ளதாகவும், இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நெருக்கடி நிலைமை அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சகலபகுதிகளிலும் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (க)

## பாதுகாப்பு நிலைகளைப் பார்த்தார்

புதுடில்லி, மார்ச். 16

பாரதத்திற்கு விஜயம்செய்த சோவியத் பாதுகாப்பு அமைச்சர் திரு. உஸ்ரனேவ், பாரதத்திலுள்ள பாதுகாப்பு நிலையங்களை பார்வையிட்டார். அவர் இன்று ஒருநாள் விஜயத்தை மேற்கொண்டு பம்பாய் சென்றுள்ளார். (க)

## வருமானம் அதிகரிப்

(கொழும்பு)

பத்து வருடகாலத்தில் சிறு ஏற்றுமதி விளைபொருள் சம்பாத்தியம் 13 மடங்காக அதிகரித்துள்ளது. இரத்தினபுரியில் புடந்த சிறு ஏற்றுமதி விளைபொகுள் நிலயத்தைத் திறந்து வைத்த காணி அமைச்சர் திரு. ஈ.எல். சேனநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வருங்காலத்தில் சிறுஏற்றுமதி விளைபொருளுக்கு பெரும் கிராக்கி ஏற்படுமென்று அவர் தெரிவித்தார்.

சிறு ஏற்றுமதி விளைபொருளுக்கு மானிய திட்டமொன்று வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

இரத்தி புரி மாவட்டத்தில் எட்டு லட்சம் ரூபா செலவில் திறக்கப்பட்ட நிலையம் போன்று மற்றும் 11 மாவட்டங்களிலும் திறக்சப்படுமென்றும் அமைச்சர் சேனநாயக்கா தெரிவித்தார். (ச)

# ''தனிநாடு போராட்டத்தை தமிழ் காங்கிரஸ் நடத்த வேண்டும்!''

## செயற்குழுக் கூட்டத்தில் பிரேரணை

(கரவெட்டி)

''தமிழ் மக்களுக்கென இறைமையுள்ள தனிநாடு அமைய வேண்டியதுஅவசியம். இதுவே இந்நாட்டில் வாழும் தமிழ்இளைஞர்களில் நூற்றுக்கு 95 வீதமானோரின் விருப்பமும் இலட்சியமுமாகும். இத்தனி நாட்டைப் பெறுவதற்கான போராட்டத்தை தமிழ்க்காங்கிரஸ் முன்னின்று வழிநடாத்த் முன்வரவேண்டும்.''

இவ்வாறு கோரும்பிரேரணை ஒன்று அகிலஇலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இளைஞர் காங்கிரஸ் சமர்ப்பிக்கவுள்ளது.

தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக்கூட்டம் இம்மாதம் 2[illegible]ம் திகதி யாழ். கட்சிக் காரியாலயத்தில் அதன் தலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரஸ்தாப கூட்டத்தில் இளைஞர் காங்கிரஸ் சமர்ப்பிக்கவிருக்கும் பிரேரணைகளில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் என்ற பெயரை தமிழ்க் காங்கிரஸ் என்று மாற்றியமைக்கும் படியும் கோரியுள்ளது.

இளைஞர் காங்கிரஸ் சமர்ப்பிககும் பிரேரணைகள் சமபந்தமான முன்னறிவித்தல் இளைஞர்காங்கிரஸ்செயலாளர் திரு. ஆர். ஈ. ஆனந்தராசாவினுல் காங்கிரஸ் பொதுச்செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது

பாரதத்தின் பல மாநிலங்களிலிருந்தும்

# பெருந்தொகையானோர் இந்து மகாநாட்டுக்கு வருவர்

## அமைச்சர் 'இராசு' தகவல்

(கொழும்பு)

இலங்கையில் அடுத்தமாதம் நடைபெற இருக்கும் உலக இந்து மகாநாட்டுக்கு பார்வையாளராக வருகைதருவதற்கு பெருந்தொகையான இந்திய இந்துமக்கள் பெருவிருப்பம் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் சகல மாநிலங்களிலும் உள்ள இந்து மக்களும் ஆதீனகர்த்தாக்களும் மற்றும் ஸ்தாபனங்களும் இம் மகாநாடு இலங்கையில் முதல்தடவையாக நடைபெறுவது குறித்து பெருமகிழ்வு கொண்டுள்ளனர்.

இவ்வாறு அண்மையில் இந்தியா சென்று திரும்பிய பிராந்தியஅபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை என்னிடம் தெரிவித்தார்.

காஞ்சிகாமகோடி சங்கராச்சாரியாருடன் தாம் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை இந்துமகாநாடு குறித்து உரையாடி அவரது ஆலோசனைகளையும் ஆசியையும் பெற்றுவருவதாகவும் திரு. இராசதுரை தெரிவித்தார்.

உலகில் அரசு ஒன்றின் ஆதரவுடன் நடைபெறும் முதலாவது உலக இந்து மகாநாடு இதுவே என்பதில் இந்திய இந்துக்களும் நிறுவனங்களும் ஸ்தாபனங்களும் இம் மகாநாட்டுக்கு ஆதரவு அளிப்பதில் முன்னிற்கிறார்கள். இந்துசமயத்தவர்கள் பட்டுமல்ல, வைஷ்ணவ சமயத்தவர்களும் இம்மகாநாட்டில் கலந்துகொள்ள ஆர்வம் தெரிவித்துள்ளனர் என்றும் பேரறிஞர்களின் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் இம் மகாநாட்டுக்கு கிடைத்துள்ளன. இதனுல் நல்ல பயன் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை என்றும் திரு. இராசதுரை தெரிவித்தார்.

---

வழக்கம்பரை கொலை வழக்கு:

## சந்தேகநபருக்கு தொடர்ந்து றிமாண்ட்!

(மாவிட்டபுரம்)

பண்ணுகம் தெற்கு வழக்கம்பரை துப்பாக்கிச்சூட்டுக் கொலைச்சம்பவம் குறித்து றிமாண்டில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபரை தொடர்ந்து றிமாண்டில் வைக்க உத்தரவிட்ட மல்லாகம் நீதிபதி அவரிடம் வாக்கு மூலம் பெறுவதற்கு காங்கேசன்துறைப் பொலிசாருக்கு அனுமதி வழங்கினுர்.

பண்ணுகம் தெற்கு வழக்கம்பரையில் செல்லத்துரை அருள்மொழிநாதன் என்னும் 24 வயது வாலிபர் தமது கடையினுள் நித்திரையில் இருந்தசமயம் துப்பாக்கியால் சுடப்பட்டு கொலைசெய்யப்பட்டிருந்தது தெரிந்ததே.

இதுகுறித்து மல்லாகம் நீதிமன்றத்தில் சரண்புகுந்த துர்க்கை நாதர் துரைசிங்கம் என்னும்அதேயிடத்தைச் சேர்ந்த சந்தேசநபர் மல்லாகம் நீதிபதியால் ஏற்கனவே றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார்.

இவர் நேற்று மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது இவரது வாக்குமூலத்தை பதிவுசெய்ய வேண்டியுள்ளதாலும், மேலும் இவரை விசாரணை செய்யவேண்டியுள்ளதாலும் இரு தினங்களுக்கு தமது பொறுப்பில் இவரை விடவேண்டுமென காங்கேசன்துறை பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் ஐயாத்துரை விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்தார்.

எதிரிசார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் வாக்குமூலத்தை றிமாண்டில் வைத்தே பொலிசார் பதிவு செய்யலாமெனவும் பொலிசாரது பொறுப்பில் இவரை விடுவது பற்றி அவரது வாக்குமூலத்தையும் ஏனைய சாட்சியங்களையும் நீதிபதி ஆராய்ந்து தேவையெனக் கருதும் பட்சத்திலேயே அவ்வாறு விடவேண்டுமெனவும், ஏற்கனவே சுப்ரீம் கோர்ட் தீர்ப்பொன்றில் இதுபற்றி தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் நீதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

இதனையடுத்து சந்தேகநபரை இம்மாதம் 31ம் திகதி வரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்ட நீதிபதி திரு சீ. வி. விக்னேஸ்வரன் றிமாண்டில் வைத்து சந்தேகநபரின் வாக்குமூலத்தை பதிவு செய்ய காங்கேசன்துறைப் பொலிசாருக்கு அனுமதி வழங்கினுர்.

இவரை பொலிசாரின் பொறுப்பில் விசாரணைக்காக ஒப்படைப்பது பற்றி பின்னர் தீர்மானிக்கலாமெனவும் அவர் அறிவித்தார். [க]

---

## 'கட்டிடங்களும் மைதானமும் மட்டும்சிறந்த பாடசாலையாகா'

(மல்லாகம்)

:'ஒழுங்கும், கட்டுப்பாடும் மிக்க வாழ்க்கையைப் பாடசாலையில் மட்டுமன்றி விளையாட்டுத் திடலிலும் மாணவர் கற்றுரணலாம்''

இவ்வாறு யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு. வி. சபாநாயகம் மல்லாகம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

மகா வித்தியாலய அதிபர் திரு. ஏ. மகாதேவன் தலைமையில் நடைபெற்ற இவ்இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம கல்வி அதிகாரி திரு. சபாநாயகம் மேலும் பேசுகையில் கூறியதாவது;

கடந்த காலத்தில் கிராமங்களில் எழுந்த பிரச்சினைகளை அவ்வக் கிராம முதியோர் சமாதானமாகத் தீர்த்து வைத்து மக்களை நீதிமன்றங்களுக்குச் செல்லாது தடுத்து வைத்திருந்தனர். ஆனுல், அந்த நிலை இன்று இல்லை.

சிறந்த பாடசாலை என்பது பாடசாலைக் கட்டிடங்களும், பரந்த விளையாட்டு மைதானமும் உள்ள ஒன்றல்ல. ஒழுங்கும் கட்டுப்பாடுமுள்ள மாணவர் சமுதாயம் எங்கிருக்கின்றதோ அதுவே சிறந்த பாடசாலைசாக கருதப்படவேண்டும்.

''விளையாட்டுக்களின் மூலம் இளம் சந்ததியினர் கெட்டுப் போவார்கள் என்ற கருத்து தவறுனதாகும். விளையாட்டும், கல்வியும் ஒருங்கு சேர்ந்தால் மட்டுமே ஓர் ஆரோக்கியமான தேசிய இனத்தைக் கட்டி எழுப்ப முடியும்'' என்றுர். (கரவெட்டி நி.)

---

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 5 ம் திகதி
வியாழக்கிழமை
(18—3—82)

மேடம்: உள்ளம் இன்பத்தால் துள்ளும், புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும்' நீண்டநாள் பிணி நிவர்த்தியாவதற்கு இடமுண்டு.

இடபம்: அதிகாரக் குறைவுச்கு இடமுண்டு, குழந்தை ஒன்றின் உடல் நலம் பாதிக்கப்படலாம் அவசர நடவடிக்கையைத் தவிர்க்கவும்.

மிதுனம்: இன்பத்தின் அணைப்பு இன்று தாராளமாகக் கிடைக்கும், காதலர்கள் வாழ்க்கையில் தடைகள் விலகும், பெற்றேர் ஆதரவும் உண் , குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

கடகம்: சிறிய விடயத்துக்குக்கூட அதிக ஆத்திரத்தைத் தரலாம், வீணுன சந்தேகங்களும் தோன்றக்கூடும், உங்களைச் சிக்கவைப்பதற்கு சூழ்ச்சிவலை விரிக்கப்படும், சிந்தித்தபின் செயலாற்றவும்.

சிங்கம்: தெய்வ நம்பிச்கையில் அதிக ஆர்வம் பிறக்கும், புண்ணியஸ்தல யாத்திரை ஒன்று மேற்கொள்ளப்படலாம், உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் தென்படுகிறது உற்சாகமானதினம்.

கன்னி: பயன்தரும் பயணம் மேற்கொள்ளப்படலாம், பழைய நினைவுகள் தலைதூக்கும், வார்த்தையில் வசீகரமும் வாழ்க்கையில் சுவையான நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

துலாம்: மக்கள்மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும், உள்ளத்தில் உவகை துள்ளும்.

விருச்சிகம்: பிரிவின் தாக்குதல்களில் வேதனைப்படுவீர்கள், தற்பெருமைக்காக தவறுன பாதையில் காலடி எடுத்து வைக்க நேரிடலாம், தொழில் துறையிலும் தயக்கநிலை தென்படும், அவதானம் வேண்டும்.

தனு: ஆசைவார்த்தைகளின்மூலம் உங்களிடமிருந்து அகப்பட்டதை சுருட்டுவதற்கு சிலர் முனைவார்கள், இனம் தெரியாத வேதனையால் அவதிப்படுவீர்கள், நிதானம் விரும்பத்தக்கது.

மகரம்: பணவிடயத்தில் திருப்தி காணப்படும், கணவன் மனைவி உறவு முறை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும்.

கும்பம்: அந்நியவாசம் அமைதிக்கு உலைவைக்கும், அபாயகரமான காரியங்களில் ஈடுபடுபவர்கள் மிகவும் அவதானமாக இருக்கவும், தெய்வ நம்பிக்கை சிறந்த பயன்தரும்.

மீனம்: வாகன விருத்தியுடன் இல்லத்தில் திருப்தி காணும், மோகன வாழ்வு கிட்டும், முன்னேற வழியும் உண்டு, தாய்வழி தனமும் சேரும்.

திருமலை க. வேலுப்பிள்ளை
சோதிடக் கலாநிதி

---

## வரட்சியினுல் தெங்குதொழில் பாதிப்பு

(கொழும்பு

கடும் வரட்சியினுல் தெங்கு கைத்தொழில் பெருமளவு பாதிப்படைந்துள்ளது.

தெங்கு உற்பத்திக்கு உரம் பாவிப்பது பெருமளவு குறைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (க)

---

வேலை பெறுவதற்கு

## சிங்கப்பூர் செல்லவிருந்தவர் மனமுடைந்து தற்கொலை

(மாவிட்டபுரம்)

சிங்கப்பூருக்கு வேலைவாய்ப்புப் பெற்றுச்செல்ல இருந்த குடும்பஸ்தர் ஒருவர் இறுதி நேரத்தில் அது கைகூடாமல் போனதால் மனமுடைந்து நஞ்சருந்தித் தற்கொலைசெய்து கொண்டார்.

மல்லாகத்தைச் சேர்ந்த கிருஷ்ணர் நவரத்தினராஜா (32 வயது) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

இவரது மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராஜா விசாரணை நடத்தினுர்.

''இறந்தவர் 2 வருடங்களுக்கு முன் திருமணம்செய்து ஒரு பிள்ளைக்குத் தந்தையாகியிருந்தார் என்றும் தொழில் ஏதுமின்றியிருந்தமையால் சிங்கப்பூருக்கு வேலைவாய்ப்புப் பெற்றுச்செல்ல இவர் ஏற்பாடு செய்தார் என்றும் ஆனுல் இறுதிநேரத்தில் அதுகைகூடாமல் போனது என்றும் விசாரணையில் கூறப்பட்டது.

---

சிலாபம் கொலை வழக்கு:

## இரு எதிரிகளுக்கும் மரண தண்டனை

(சிலாபம்)

சிலாபம் கொலை வழக்கில் எதிரிகள் இருவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு சிலாபம் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி கே. பாலகிட்ணர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் சைக்கிளில் சென்ற நிமால் என்பவரை பொல்லால் தாக்கிக் கொலை செய்ததாக மகாத்தயா, கிறிஸ்டோபர் ஆகியோர்மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் இருவரும் கொலைக் குற்றச்சாட்டில் குற்றவாளிகள் என ஜூரிசபையினர் ஏகமனதாக தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து நீதிபதி எதிரிகளுக்கு தூக்குத்தண்டனை விதித்தார். (க)

---

பொலிசாருக்கு

## இலவச பயணம்


(கொழும்பு)

இருப்பிடங்கலிலிருந்து காரியாலயத்துக்கும். மற்றும் சேவையிலீடுபட்டிருக்கும் இடங்களுக்கும் இலவசமாகப் பஸ்ஸில் சென்றுவரப் பொலிசாரை அனுமதிப்பதென இலங்கைப் போக்குவரத்துச் சபை தீர்மானித்துள்ளது.

இச்சலுகைபற்றி போக்குவரத்து அமைச்சர் தீர ஆராய்ந்துள்ளதுடன், போக்குவரத்துப்பகுதியினருக்கு இதனுல் ஏற்படும் இழப்பைச் ஈடுசெய்ய பொலிஸ் திணைக்களத்திடமிருந்து ஒரு கோடி ரூபாவைப் பெறவிருக்கின்றுர். (கி)

---

## தவக்கால நற்சிந்தனை



உன் மரணத்திற்குப் பின் உன்னை நினைப்பவன் யார்? உனக்காக வேண்டிக்கொள்பவன் யார்? எனக்கு மிகவும் பிரிய மானவனே, உன்னுற் கூடுமானதைச் செய், இப்போதே செய். ஏனெனில் நீ எப்போது மரணிப்பாய் என்றறியாய், சாவுக்குப்பின் உனக்கென்ன சம்பவிக்கப்போகிறது என்பதையும் நீ அறியாய். உனக்கு நேரமிருக்கும் போதே அழியாத திரவியங்களைச் சேகரித்துக்கொள். உன் இரட்சணியத்தை மட்டும் நினை. சர்வேசுரனுக்கு அடுத்தவைகளை மட்டும் கவனி. நீ இவ்வுலக சீவியத்தைவிட்டுப் பிரிந்து போகும்போது புனிதர்கள் ''நித்தியகூடாரங்களில்உன்னை வரவேற்றுக் கொள்ளும்படியாக'' அவர்களை வணங்கி வருவதாலும், அவர்களுடைய நன்மாதிரிகளைக் கண்டுபாவிப்பதாலும் இப்போதே சிநேகிதர்களைச் சம்பாதித்துக் கொள்.

(கிறீஸ்துநாதர் அனுசாரம்)

---

## கோப்பாய் வட்டார பாடசாலைகளின் நூலக வசதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொதுசன நூல் நிலைய மீள்விப்பு நிதி சேர்ப்பதையொட்டி இடம் பெற்ற கொடித்தின விழாவையொட்டி கோப்பாய் வட்டாரத்திலுள்ள ஐம்பத்துமூன்று பாடசாலைகள் 16643ரூபா29 சதம் சேகரித்து உதவியுள்ளன.

உரும்பராய் இந்துக்கல்லூரி அதிபர் திரு. இ. சிவானந்தன் தலைமையில் நடைபெற்ற கொடித்தின வைபவநிதிசேர்க்கும் முயற்சிக்கு கோப்பாய் வட்டாரத்திலுள்ள பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள்மாணவர்கள் உட்படச் சகலரும் உற்சாகமாக ஒத்துழைப்பு நல்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

கொடித்தின வைபவத்தைப் பாடசாலைகளில் நடாத்துவதற்குப் பொறுப்பாக இயங்கிய வண. பிதா பிரான்சிஸ் யோசேப் அடிகள் கோப்பாய் வட்டாரத்திற்கான நிதியை அதிபர் திரு. இ சிவானந்தனிடமிருந்து பெற்றுக்கொண்டார், (அ)

---

## மாணவர்களுக்கு பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

மல்லாகத்திலிருந்து தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, யூனியன் கல்லூரி ஆகியவற்றுக்குச் செல்லும் மாணவர்களுக்குத் தனித்தனியான பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முன்னர் இம்மாணவர்களுக்காக ஒரேயொரு பஸ் சேவை மட்டுமே நடாத்தப்பட்டது. மாணவர் தொகை அதிகரித்ததையிட்டு இரண்டு பஸ்கள் சேவையிலீடுபடுத்தப் படுகின்றன. தமக்கு ஏற்பட்ட வசதியீனம் பற்றி மேற்படி இரு கல்லூரிகளையும் சேர்ந்த மாணவர்கள் மகஜர் ஒன்றைத்தயாரித்து மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் மூலம் வ. பி. போ. ச தலைவருக்கு அனுப்பி வைத்ததையடுத்து இந்த பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக திரு. ஸ்ரீபாஸ்கரன் வ. போ. சபைக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

# "இறந்த எனது மகன் பயங்கரவாதச்செயல் தொடர்பாக கைது செய்யப்பட்டிருந்தார்"

## வல்வை இளைஞர் கொலை விசாரணையில் சாட்சியம்

(கரவெட்டி—புலோலி நிருபர்கள்)

''வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஒரு பெண்ணை விரும்பிய எனது மகன் அப்பெண்ணை பலாத்காரமாகக் கடத்திச் சென்றார்.''

இவ்வாறு வல்வை இளைஞர் பா. ஜெய்சங்கர் (வயது 23) கொலை சம்பந்தமான மரண விசாரணையில் சாட்சியமளிக்கையில் கொலையுண்ட வாலிபரின் தந்தை பொன்னுச்சாமி பாலசுப்பிரமணியம் பிள்ளை (61 வயது) கூறினார்.

இம்மரண விசாரணையை பருத்தித்துறை பதில்நீதவான் திரு. ஜீ. வி. பாலசுப்பிரமணியம் மேற்கொண்டிருந்தார். பொன்னுச்சாமி பாலசுப்பிரமணியம் தனது சாட்சியத்தில் தொடர்ந்து கூறியதாவது:

''இறந்தவர் என். சீ. ஜீ.ஈ. வரை படித்தவர். சில காலம் வல்வெட்டி தியேட்டரில்வேலை பார்த்த பின்னர் சட்டவிரோதமாக கடத்திலிலும் அவர் ஈடுபட்டிருந்தார். ''வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஒரு பெண்ணுடன் காதல்கொண்டிருந்த எனது மகன், அப்பெண்ணை பலாத்காரமாகக் கடத்தினார். இக்கடத்தல் சம்பவம் தொடர்பாக இவரது தமையனார் ரவிசங்கரும் கைது செய்யப்பட்டு வல்வெட்டித்துறைப் பொலிசாரால் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நடந்தது. 1979ம் ஆண்டு செப்டம்பரில் பயங்கரவாதச் செயல்தொடர்பாக சந்தேகத்தின் பேரில் அவர் கைது செய்யப்பட்டு யாழ். இராணுவ முகாமில் வைக்கப்பட்டு 15 நாட்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

சம்பவம் நடந்ததினம் இரவு 6.00மணியளவில் இறந்த எனது மகனைத்தேடி இருவர் வந்தார்கள். அவர்கள் இருவரும் ஜெயசங்கர்இருக்கிறாரா என்று விசாரித்தார்கள். அப்பொழுது ஜெயசங்கர் குளித்துக்கொண்டு இருந்தார், ஜெயசங்கர் குளித்துவிட்டு வந்த பின்னர் தேநீர் அருந்தி விட்டு மூவருமாகப் புறப்பட்டுச்சென்றார்கள். விசாரித்து வந்த இருவரில் ஒருவர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர் மற்றவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் பெயர் என்னவென்று தெரியாது.

''நாங்கள் இரவு 7.30 மணியளவில் வீட்டில் இருக்கும் போது வேலைகாரப்பொடியன் வந்து எனது மகன் உதயமக்கா வீட்டிற்கு முன்னால் யாரோ இரத்தக்காயங்களுடன் விழுந்துகிடக்கிறார் என்று கூறினான், அங்கு சென்று பார்த்த போது எனது மகன் இரத்தவெள்ளத்தில் கிடந்தார். அந்த வேளையில் மின்சார வெளிச்சமும் இருக்கவில்லை. சனங்கள் மூன்று நாலு வெடிச்சத்தங்கள் கேட்டதாகக் கதைத்ததைக் கேட்டேன்''— என்று அவர் கூறினார்.

### சகோதரி சாட்சியம்

இறந்த வாலிபரின் சகோதரி உதயகுமாரி அருணகிரிநாதன் (வயது 30) சாட்சியமளிக்கையில் கூறியதாவது: ''இறந்து போனவர் எனது இளைய சாகாதரர். சம்பவதினம் பிற்பகல் 4.00 மணியளவில் எனது வீட்டிற்கு அவர் வந்து 1' ம் திகதி கரகம் எடுப்பது சம்பந்தமாகச் சதைத்துவிட்டு திரும்பிச் சென்றார் அதன் பினனர் எங்கு சென்றார் என்று தெரியாது.

''இரவு 7.15 மணி அளவில் எமது வீட்டு ஒழுங்கையில் யாரோ தூஷண வார்த்தைகளுடன் ''என்ன சேஷ்டையா விடுகிறாய், அடே நில்! நில்'' என்று சத்தம் கேட்டது. அதன்பின் ஒரு வெடிச்சத்தம் கேட்டது. சிறிது நேரத்தில் மூன்று வெடிச்சத்தங்கள் அடுத்தடுத்துக் கேட்டன. அதே நேரம் மின்சார வெளிச்சமும் நின்றுவிட்டது.

''நான் வீட்டு விறாந்தையில் இருந்து கொண்டு பார்த்தேன். இருவர் கடற்கரைப் பக்கமாக ஓடினார்கள். ஐந்து நிமிடங்களில் மின் வெளிச்சம் வந்தது. சற்று நேரத்தில் அயலவர்கள் குளறுவதைக் கேட்டு வெளியே பார்த்தபோது எனது தம்பி ஜெய்சங்கர் இரத்தக் காயங்களுடன் இறந்திருக்கக் காணப்பட்டார், யார் செய்திருப்பார்கள் என்று என்னால் கூறமுடியாது'' என்றார்.

### இறந்தவரின் நண்பர் சாட்சியம்

சுப்பிரமணியம் சந்திரலிங்கம் (29 வயது) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

சம்பவதினம் நான் நகரில் நிற்கும்போது, ஒருவர் வந்து விலாசம் ஒன்றைக் காட்டி இவருடைய வீட்டைக் காட்டும்படி கேட்டார். அந்த விலாசத்தில் குறிப்பிட்டவரைத் தெரியாதபடியால் ஜெயசங்கர் வீட்டுக்கு அவரை அழைத்துக்கொண்டு போனேன். அங்கே ஜெய்சங்கர் குளித்துக்கொண்டிருந்தார். அவர் வரும்வரை கதைத்துக்கொண்டிருந்தோம். ஜெய்சங்கர் குளித்துவிட்டு வந்த பின்னர் என்னுடன் வந்தவரை அறிமுகப்படுத்தி இவர் எனது கள்ளக் கடத்தல் வியாபார நண்பர் மூர்த்தி எனவும், இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்றும் கூறினார்.

பின்னர் மூவரும் புறப்பட்டு வந்தபோது நாளை கரகத்திற்கு குட்டியிடம் கூறிவிட்டு வருவோம் என்று சொல்லி, மூவரும் நடந்து ஊறணியில் உள்ள குட்டி வீட்டிற்குப் போனோம் 6.30 மணியளவில் குட்டிவீடு சேர்ந்தோம் அங்கே தேநீர் அருந்திவிட்டு குட்டியின் காரில் ஏறி வல்வை நகரை நோக்கி வரும்போது ஜெய்சங்கர் தான் வீட்டுக்குப் போகவேண்டும் என்று அமெரிக்கன் மிஷன் பாடசாலைச் சந்தி ஒழுங்கையில் இறக்கி விடும்படி கேட்டு இறங்கினார். அப்போது நேரம் 7,00மணி இருக்கும். மூர்த்தி வல்வெட்டித்துறைச் சந்தியில் உள்ள பஸ்நிலையத்தில் இறங்கி விட்டார். அவர் யாழ். செல்வதற்காகவே அதில் இறங்கினார். நான் வீடுபோனேன். இரவு 8. 00 மணியளவில் யாரையோ சுட்டுப்போட்டார்கள் என்று கேள்விப்பட்டேன். மறு நாட் காலை, ''உம்முடன் வந்த ஜெயத்திற்கு யாரோ சுட்டுப் போட்டார்கள்'' என்று பொலிசார் என்னைச் சந்தேகத்தின்பேரில் தேடுகிறார்கள் என்று அறிந்தேன் என்றார்

### கார்ச்சாரதி சாட்சியம்

கார்ச்சாரதி சோதிலிங்கம் சோமசுந்ரம் (குட்டி) (வயது 24) சாட்சியமளிக்கையில் கூறியதாவது;

''நான் வீட்டிலிருக்கும் போது மூவர் வீடு வந்தார்கள். மூர்த்தியை ஜெய்சங்கர் அறிமுகப்படுத்தி வைத்தார். பின்னர் தேநீர் அருந்திவிட்டு காரில் நால்வரும் போனோம். அவர்களை இறக்கிவிட்டு வீடு திரும்பி வந்தபோது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பற்றிக் கேள்விப்பட்டேன் பொலிசார் என்னைச் சந்தேகிக்கிறார்கள் என்று எனது வாய்முறைப் பாட்டைக் கொடுத்தேன்'' என்றார்.

பிரேதபரிசோதனையை மேற்கொண்ட பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை டாக்டர் கே. லலிதகுமார் குறிப்பிட்டதாவது; ''இறந்தவரின் உடலில் மூன்று துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன. ஒருகாயம் தலைக்கு பின்புறமாகவும் இன்னொரு காயம் வலதுபக்க மூக்கில் கண்பக்கமாகவும், மற்றக்காயம் இடது காதின் பக்கம் தலை மேற்புறமாகவும் காணப்பட்டன. உடலில் இருந்து இரண்டு சன்னங்கள் கண்டெடுக்கப்பட்டன. இவருக்குத் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களினால் மரணம் சம்பவித்தது''.

சாட்சியங்களை வல்வை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. கினிகே, சப்இன்ஸ்பெக்டர் சமரவீரா, பொலிஸ் கான்ஸ்டபிள் அ. அ. யோகராசா ஆகியோர் நெறிப்படுத்தினார்கள். மரணவிசாரணையை மேற்கொண்ட பதில் நீதவான் கொலைஎன்று தீர்ப்பளித்தார்.

---

# "பத்திரிகையாளர்கள் சமுதாய ஊழல்களை அம்பலப்படுத்த வேண்டும்"

(கொழும்பு)

பத்திரிகைகள் சமுதாயத்திலுள்ள குறைகளை மட்டுமல்ல, அமைச்சுக்கள், திணைக்களங்கள் போன்ற அரசாங்க நிறுவனங்களில் இடம்பெறும்ஊழல்கள், முறைகேடுகள் அம்பலத்துக்குக் கொண்டுவந்துஊழல், மோசடியற்ற ஆட்சி நிலவ உழைக்கவேண்டும். இவ் விஷயத்தில் பத்திரிகைஆசிரியர்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

இவ்வாறு கல்வியமைச்சைச் சேர்ந்த பெரும்பாக கல்வியதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

தினகரன் ஆசிரியர் திரு.இ. சிவகுருநாதன் உழைக்கும்பத்திரிகையாளர் சங்கத்தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டதற்கு பாராட்டுத் தெரிவிக்கும்வைபவம் ஒன்று கொழும்புஜெயந்திநகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் தெக்ஷணத்து வேளாளர் மகமைப்பரிபாலன சபையின் ஆதரவில் நடைபெற்றது.

மேற்படிசங்கத்தலைவர் திரு. க. சி சிவசங்கரன்பிள்ளை திரு. சிவகுருநாதனை பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

திரு மாணிக்கவாசகர் மேலும் பேசுகையில், எமது ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன ஊழலற்ற, மோசடியற்ற ஆட்சி நடத்த வேண்டும் என்பதற்காகவே உழைத்துவருகிறார். அதற்கு பத்திரிகை ஆசிரியர்கள் உழைக்க வேண்டுமென்றும் கூறினார்.

இலங்கையிலுள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பொது முகாமையாளர் திரு. எஸ்.கள்ளப்பன்பேசுகையில், கத்தியின் முனையைவிட பேனாவின் முனையே கூரியதென்றும் அந்தக் கூரிய ஆயுதத்தால் திரு. சிவகுருநாதன் தொடர்ந்தும் சேவையாற்ற வேண்டுமென்றும் கூறினார்.

திரு. சிவகுருநாதன் தமக்கு அளிக்கப்பட்ட கௌரவத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், பத்திரிகை ஆசிரியர் என்றரீதியில் நாட்டுக்கும் மக்களுக்கும் இதுவரை ஆற்றி வந்தது போன்று தொடர்ந்தும் சேவையாற்றுவதாகவும் தமக்குக் கிடைத்த இந்தக் கௌரவம் தமது ஸ்தாபனத்துக்கே உரியது என்றும் தெரிவித்தார்.

விழாவுக்கு திரு. சிவகுருநாதனையும் பாரியாரையும் தொழிலதிபர் திரு. வி. ரி. வி. தெய்வநாயகம் வரவேற்றார்.

திரு. தெ. ஈஸ்வரன், எஸ். திருச்செல்வம், க சி சண்முகம், வித்துவான் இ. சோதிநாதன் ஆகியோரும் உரையாற்றினர்.

திரு. வ. நடராஜா நன்றி தெரிவித்துப் பேசினார்.

---

## தலைவராகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

அராலி தெற்கு, கிழக்கு கிராமோதய சபைத்தலைவராக திரு. வி. கே. கந்தையா தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் அராலிதெற்கு கிழக்கு பாவனையாளர் சங்க உறுப்பினரும், அராலிதெற்கு கிராம அபிவிருத்திச்சங்க தலைவருமாவார்.

இளைப்பாறிய தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டரான இவர் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவில் இருக்கும்போது பல புதிய முறைகளை அறிமுகப்படுத்தியதோடு பொலிஸ் நலன்புரிச் சங்கத்தில் 'உபகாரநிதி' ஒன்றை அறிமுகப்படுத்தியவ ரென்பது குறிப்பிடத்தக்கது. (கு)

---

## திறப்புக் கோர்வை

திறப்புக்கோர்வை ஒன்று அளவெட்டி அம்பட்டா வத்தைறோட்டில் கு.திருநாவுக்கரசு என்பரினால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக் கொள்ளலாம்.

---

## மேற்கு ஜேர்மனியர் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு வரும் மேற்கு ஜேர்மனிய உல்லாச பிரயாணிகள் தொகை அதிகரித்துள்ளது.

85,000ச்கு அதிகமான உல்லாசப் பிரயாணிகள், மேற்கு ஜேர்மனியிலிருந்து இங்கு வந்துள்ளனர். ஐரோப்பிய நாடொன்றிலிருந்து இவ்வளவு தொகையான உல்லாசப் பிரயாணிகள் வந்துள்ளது இதுவே முதல்தடவையாகும்.

மே. ஜேர்மன் உல்லாசப்பிரயாணிகள் தொகை 13.5 வீதமாக அதிகரித்துள்ளதாக உல்லாசப் பிரயாணிகள் சபை தெரிவித்துள்ளது. (க)

---

## போட்டியின்றி தெரிவு

(யாழ்ப்பாணம்)

வலி. தெ. உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராமோதய சபைத்தலைவர்கள் தெரிவில், ஏழாலை, புன்னாலைக்கட்டுவன் தவிர்ந்த 6 இடங்களில் தலைவர் ள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டனர்.

சன்னாகம் இ. இளையதம்பி, ஏழாலை மு. இரத்தினம் (எம். ஆர்.) குப்பிளான் பொ. நடனசிகாமணி' புன்னாலைக்கட்டுவன் ச. முருகநேசன், இணுவில் எஸ். இலகுநாதன், உடுவில் சி. அரசகுலரத்தினம், கந்தரோடை ம. நடராசா, தாவடி இரா. சந்திரசேகரம். (மா)

---

### ஆலயம் சென்றுதிரும்பிய தம்பதிகள்:

# துப்பாக்கிமுனையில் தாலிக்கொடி திருட்டு

(யாழ்ப்பாணம்)

தேவாலயத்தில் வழிபாடு செய்துவிட்டு வீடு திரும்பிய தம்பதிகள் கொள்ளைக் கோஷ்டியிடம் தங்கள் உடைமைகளைப் பறிகொடுத்துவிட்டு வெறுங்கையுடன் திரும்பினராம்.

முருங்கன் சின்னபண்டிவிரிச்சான் பகுதியில் வசிக்கும் கிறிஸ்தோபர் அந்தோனிப்பிள்ளையும் அவரது மனைவியும் சைக்கிளில் நேற்றுமுன்தினம் மடுகோவிலுக்கு பூசைக்குச் சென்றுவிட்டு, பிற்பகல்6மணியளவில் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோதுபண்டிவிரிச்சான் 5வது மைலில் 3 இளைஞர்கள் துப்பாக்கி முனையில் தம்பதிகளை மிரட்டி தாலிக்கொடி, சங்கிலி, சைக்கிள் உட்பட 14,000 ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றனராம்!

கவலையுடன் நடந்து சென்ற தம்பதிகள் முருங்கன் பொலிசில் தங்களுக்கு நேர்ந்தஅவலநிலை குறித்து முறையிட்டுள்ளனர்.

இக்கொள்ளை சம்பந்தமாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. (மா)

---

## கயிலாயபிள்ளை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்தவர்கள் யார் குத்தினார் என்று எப்படித் திட்டவட்டமாகக் கூறமுடியும்?

எதிரி ஆட்கொலை குற்றத்துக்கோ அல்லது குறைந்த குற்றத்துக்கோ உயர் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்படுவதற்கு இங்கு சாட்சியம் அளித்தவர்களின் சாட்சியம் திருப்தியற்றது.

எமது அபிப்பிராயத்தின்படி திட்டமிட்டு மது அருந்தி எதிரிக்கு ஒருநல்ல பாடம்படிப்பிப்பதற்காக இறந்தவரும் சாட்சிகளும் அன்றைய தினம் எதிரியை தேடிச் சென்றார்கள் என்று சாட்சியம் தெளிவுபடுத்துகின்றது.

ஆகவே எதிரியை விடுதலை செய்கிறேன். (மா)

---

TAL 1369

"ஸ்டொப்" இளட்ச் & பிறேக் புளூயிட்

மலிவான விலைக்கு
போதியளவு
பெற்றுக்கொள்ளலாம்

STOP
Hydraulic BRAKE & CLUTCH FLUID

விநியோகஸ்தர்கள்:-
லிமிடெட்
டீமோ இன்டஸ்றீஸ்
65, ஜேத்தவன வீதி,
கொழும்பு - 14.
தொலைபேசி:23702-4, 34751




CHEMANEX
தயாரிப்பு:
கெமனெக்ஸ் லிமிட்டெட்

450 மி. லீட்டர் ரூபா 24-25 சதம்
225 மி. லீட்டர் ரூபா 13-50 சதம்

ஹரன் யாழ்.நகரி
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு — சுமலதா
திசைமாறிய பறவைகள்

## கிராமிய வங்கி

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பல நோ.கூ. சங்கம் எதிர்வரும் 31ந் திகதி நெடுந்தீவில் கூட்டுறவுக் கிராமிய வங்கியைத் திறந்து வைக்கவுள்ளது. இவ்வைபவத்தில் பிரதமவிருந்தினர்களாக தீவுப் பகுதி பராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம், யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, ஆகியோர் கலந்து கொள்ள விருப்பதாக மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. நா. இராமச்சந்திரன் தெரிவித்தார்.

(அ)

வெஸ்லி சுன்னிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.15
சிவாஜி — விஜயா
ரிஷிமூலம்

சாந்தி (யாழ்ப்பாணம்) 10.30, 2.30, 4.45
7.00, 9.30
Rex Harrison, Darmendra, Zeenath Aman
"SHALIMAR" Scope Color
An Action packed "English" Movie

ஸ்ரீதர் தினசரி: 2.30, 3.30, 6.30,
9.30
முத்துராமன்—சுஜாதா
உறவுசொல்ல ஒருவன்
20.3.82 முதல் THE SPY WHO LOVE ME
James Bond 007
அடுத்த வெளியீடு
ரஜனிகாந்த் நடித்த
பொல்லாதவன்

மக்களின் ஏகோபித்த பாராட்டுக்களுடன்
5-வது வாரமாகக் காட்சியளிக்கிறது
யாழ்.றீகல்
தினசரி10—30, 2—00,
6—30, 9—30 (4 காட்சிகள்)
தனிமரம்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10.30, 2.30
6.30, 9.30
ஏ. வி.எம்.ராஜன்—பானுமதி—சோ
பூவும் பொட்டும்

2-வது ஜனத்திரள் மாதம்
ராணி (யாழ்.நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

2-வது வெற்றிகரமான மாதம்
ராஜா தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
பிரதாப் சுரேகா
தக்காரா
(கலர்—மலையாளம்) (இளமை—சுகம்)
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)


வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
DRAGON PRINCESS

லிடோ
(யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
பூந்தளிர்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி
10.30, 2.30, 6.30, 9.30
சிவாஜி - ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ - பத்மினி
குலமாகுணமா புதிய பிரதி
விரைவில் எதிர்பாருங்கள்
சிவாஜி—கமல்—ரஜனி—ஸ்ரீபிரியா
நடித்த
நட்சத்திரம்



யாழ். சம்பத்திரிசியார் கோஷ்டி



யாழ்ப்பாணக் கல்லூரி கோஷ்டி

# 65வது வருடாந்த கிரிக்கெட்

## யாழ்ப்பாணக் கல்லூரி - சம்பத்திரிசியார்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், யாழ். சம்பத்தரிசியார் கல்லூரிக்குமிடையேயான 65 வது வருடாந்த கிரிக்கெட் மோதல் இன்றும், நாளையும் யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னல் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

### - வெற்றி -

யாழ்ப்பாணக் கல்லூரிக் கிரிக்கெட் கோஷ்டிக்கு எஸ். வெங்கடேஸ்வரன் தலைமை தாங்குகிறார். சிறந்த வேகப் பந்து வீச்சாளரும், துடுப்படி வீரருமான இவர் மகாஜனக் கல்லூரிக்கு எதிரான போட்டியில் 86 ஓட்டங்களை எடுத்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணக் கல்லூரியின் வேகப்பந்து வீச்சாளரான கே. முரளீதரன் இம்முறைப் போட்டியில் அதிக விக்கட்டுகளைக் கைப்பற்றுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணக் கல்லூரிகோஷ்டியின் சிறந்த துடுப்படி வீரர்களான எஸ். வெங்கடேஸ்வரன், என். தனஞ்செயன், ரகுராஜ், கே. முரளீதரன், கணேசன், எஸ். ரவீந்திரன். ஜெனி றட்ணராஜா ஆகியோர் இந்த வருடப்போட்டியில் இக்கல்லூரிக்கு அதிக ஓட்டங்களை பெற்றுக் கொடுப்பார்கள் என கருதப்படுகிறது.

யாழ்ப்பாணக் கல்லூரி கிரிக்கெட் கோஷ்டியின் அதி வேகப் பந்து வீச்சாளர்களாக எஸ். ஞானசுப்பிரமணியம், எஸ். வெங்கடேஸ்வரன், கே. முரளீதரன் ஆகியோர் விளங்குகின்றனர்.

இக் கல்லூரியின் சிறந்த சுழல்பந்து வீச்சாளர்களாக என். தனஞ்செயன் விளங்குகிறார்.

யாழ். சம்பத்தரிசியார் கல்லூரி கிரிக்கெட் கோஷ்டிக்கு திரு. செல்லப்பா தலைமைதாங்குகிறார். சிறந்த துடுப்படி வீரரான இவர், குறுகிய நேரத்தில் அதிகளவு ஓட்டங்களை எடுப்பதில் திறமை வாய்ந்தவர்.

இக் கோஷ்டியில் மெலானியல், ரியூசியஸ், அரியராசா ஆகிய சிறந்த துடுப்படி வீரர்களும் இடம்பெற்றுள்ளனர்.

யாழ். சம்பத்தரிசியார் கல்லூரி கோஷ்டியில் நவனீதராசா. ரிபூசியஸ், செல்லப்பா ஆகிய சிறந்த பந்துவீச்சாளர்களும் இடம்பெற்றுள்ளனர்.

இவ்விரு கோஷ்டிகளும் சரிசமமான பலம் கொண்டவையாக விளங்குவதால், இவற்றில் எது வெற்றிபெறும் அல்லது தோல்வியுறும் என்பதை போட்டிநேர இறுதிவரை நிர்ணயிக்க முடியாதென்று கிரிக்கெட் ரசிகர்கள் தெரிவிக்கிறார்கள்.

## அடிக்கடி தீப்பற்றி எரியும் காடுகள் பொலிசாருக்கு எச்சரிக்கை உத்தரவு

(கொழும்பு)

தற்போது நாட்டின் பல பாகங்களிலும் சிறப்பாக வரண்ட பகுதிகளில் நிலவி வரும் கடும் வரட்சி காரணமாக நெல் விளைநிலங்களும் பற்றைக்காடுகளும் அடிக்கடி தீப்பற்றி எரிவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே இத்தகைய சம்பவங்களினுல் பெருஞ் சேதங்கள் ஏற்படாதிருக்கும் வகையில் எச்சரிக்கையாக இருக்கும்படி சகல பொலிஸ் பொறுப்பதிகாரிகளும் தலைமையகத்தினுல் பணிக்கப்பட்டுள்ளனர்.

கடும் வெப்பத்தினுல் காய்ந்து சருகாகியிருந்த புல் நிலங்களிலும் பற்றைக்காடுகளிலும் மற்றும் சிறுகாடுகள் வயல்கள் போன்றவற்றிலேயே தீப்பிடித்திருப்பதாக அறிவிக்கப்பட்டபோதிலும் உயிர்ச்சேதமோ அல்லது பெருமளவு சொத்துக்களுக்குச் சேதமோ ஏற்பட்டதாக அறிவிக்கப்படவில்லையென பொலிஸ் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

இத்தகைய தீப்பற்றல் நாட்டின் எப்பகுதியிலாவது ஏற்படும் பட்சத்தில் அது மேலும் பரவாது உரிய நடவடிக்கைகளை யெடுக்கும்படி சகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளும் கேட்கப்பட்டிருக்கின்றனர். [கி]

# வரி விளம்பரம்

## தவறிவிட்டது

8.3.82ல் யாழ். இராமநாதன் நுண்கலைப் பிரிவினரால் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்தப்பட்ட 'நாதவாஹினி' விழாவில் கமரா கவர் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'ஈழநாடு' ஊழியர் சிவரத்தினம் அவர்களிடம் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 2573

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சட்டநாதர் வீதியில் புதிய வீட்டுடன் கூடிய 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் பார்வையிடலாம். நேரில் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி இ. கமலநாதன், சட்டத்தரணி, ஆடியபாத வீதி, திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணம். 2561

புதிய நிலையில் Honda C 90 (ஹொண்டா) Lambretta (லம்பிறட்டா) இத்தாலியன் மொடல் ஸ்கூட்டரும் விற்பனைக்குண்டு. அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். பாலேந்திரா பாலேந்திரா, 95, ஆஸ்பத்திரி வீதி, திருவள்ளுவர் சிலைக்கு அருகாமையில் [கொட்டடி] யாழப்பாணம். Tel. 7603 [2442]

யாழ். சேர். பொன் இராமநாதன் வீதிக்கு அருகாமையில் 2 பரப்பும், கள்ளியங்காட்டுக்கும் இருபாலைக்குமிடையில் (கட்டைப்பிராய்) மெயின் வீதியிலிருந்து 1/4 மைல் தூரத்தில் 9 1/4 பரப்பும் அதற்கருகாமையில் 6 பரப்பும் உண்டு. விற்பனவுக் கொமிசனர், 111, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 2575

மாநகரசபை எல்லைக்குள் மாம்பழம் சந்தியில் 5 பரப்பு தென்னங்காணி விற்பனைக்குண்டு. சகல வசதிகளும் அருகாமையில் உண்டு. விலை பரப்பு 40,000/— பிரித்தும் கொடுக்கப்படும். N. U. மூர்த்தி. 45, யமுனு வீதி, நல்லூர். 2576

## தேவை

சுன்னுகம் பஸ் நிலையத்திற்கு அல்லது நவீன சந்தைக்கு முன்பாகவோ அயலிலோ தளத்தில் அல்லது மாடியில் வியாபார ஸ்தாபனம் ஒன்று குத்தகைக்கோ விற்பனைக்கோ தேவை. விண்ணப்பிக்க. விளம்பர இல: 2538, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (2538)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி கொன்வென்ற் சந்திக்கு அருகாமையில் கடை வாடகைக்கு உண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: S. T. தில்லைநாதன், 428, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2574

சுன்னுகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)
சுன்னுகம்

## முக்கிய அறிவித்தல்

எங்கள் சங்கம் தனிப்பட்ட வியாபாரிகளிடமிருந்தும், உற்பத்தியாளர்களிடமிருந்தும் நெல் கொள்வனவு செய்யவுள்ளது. நெல்லை விற்பனைசெய்வோர் சங்கத்துடன் எழுத்துமூலமான தொடர்புகொள்ளவும். காலத்திற்கேற்ப சந்தை விலையை அனுசரித்து கொள்வனவுகள் நடைபெறும்.

பொதுமுகாமையாளர்.
15.03.82 2568

## கரையோர கப்பல்சேவை வெற்றி

(கொழும்பு)

இலங்கையில் கரையோரக் கப்பல் போக்குவரத்து சேவை வெற்றியளித்துள்துள்ளது.

திருமலை பிறிமா ஆலையிலிருந்து கொழும்புக்கு மா விநியோகம் செய்வதிலும் காங்கேசன்துறைசிமெந்து தொழிற்சாலைக்கு 'கிளிங்கள்' விநியோகம் செய்வதிலும், கரையோர கப்பல்சேவை வெற்றியளித்துள்ளதாம். [க]


**Diploma in Draughtsmanship**

இதற்கான புதிய வகுப்பு 14—3—82 ஞாயிறு ஆரம்பமாகியுள்ளது

விபரங்கட்கு:

**JASE INSTITUTES**

(Opp. Bank of Ceylon)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

2577



## உடன் தேவை

வடபிரதேசத்தில் (மன்னுர், வவுனியா, முல்லைத்தீவு, அனுராதபுரம், திருகோணமலைப் பகுதிகள் உட்பட) எப்பகுதியிலாவது பயிர்ச்செய்கைக் காணிகள், வீட்டு நிலங்கள், தென்னந்தோட்டங்கள் விற்பனவுக்கும், வீடுகள், கடைகள், கைத்தொழிற்சாலைகள் விற்பனவுக்கோ அன்றி வாடகைக்கோ அன்றிக் குத்தகைக்கோ கொடுப்பதற்கும் இருப்பின் உடனடியாக எம்முடன் தொடர்புகொள்ளவும்.

திட்ட அதிகாரி:—

தோட்டக் காணிப்பிரிவுப் பகுதி

த பினுன்ஸ் கம்பனி லிமிட்டெட்

249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி: 7680.


# "உணவு முத்திரைகளைக் கொடுத்து எதிரி பணத்தைப் பெற்றுர்"

## சங்கானை வியாபாரி சாட்சியம்

(மாவிட்டபுரம்)

"16 உணவு முத்திரைகளை என்னிடம் தந்து 200 ரூபா பணம்பெற்ற எதிரி, 2 கிழமைக்குள் பணத்தைத்தந்து முத்திரைகளை எடுப்பதாக கூறியிருந்தார் ஆனுல் ஒன்றரை மாதமாக அவர் அதனை திருப்பிஎடுக்கவில்லை. இது பற்றி நான் அவரிடம் கேட்கவில்லை."

இவ்வாறு உணவுமுத்திரை திருட்டு வழக்கில் சாட்சியமளித்த சங்கானையில் கடை நடத்தும் நடராசா மனேராஜா என்பவர் கூறினுர்.

சங்கானை உதவிஅரசாங்க அதிபர் அலுவலகத்திலிருந்து 29 உணவுமுத்திரைகளை திருடியதாகவும் திருடிய உணவு முத்திரைகளில் 16 முத்திரைகளை தன்வசம் வைத்திருந்ததாகவும் குற்றஞ்சாட்டி மேற்படி அலுவலக சிற்றூழியரான எஸ். சவரிமுத்து என்பவர் மீது இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது.

மல்லாகம் நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணைக்கெடுக்கப்பட்டசமயம் நடராஜா மனேராஜா என்பவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது;

"எதிரி 16 உணவுமுத்திரைகளை என்னிடம் தந்து 200 ரூபா பணம் தருமாறும் 2 கிழமைக்குள் பணத்தை தந்து திருப்பி எடுப்பதாகவுங் கூறியிருந்தார். பின்னர் அவர் வரவில்லை. 9.1.81ல் சங்கானை உதவி அரசாங்க அதிபர் என்னிடம் இதுபற்றி விசாரித்தார். அவரிடம் முத்திரைகளை பாரம் கொடுத்தேன்."

குறுக்குவிசாரணையில் கூறியதாவது:

கேள்வி: எதிரி முத்திரைகளை உம்மிடம் தந்தசமயம் உமது தந்தை கடையில் இருந்தாரா?

சாட்சி: இல்லை.

கே: எதிரியிடம் பெற்ற முத்திரைகளை எங்கே வைத்திருந்தீர்?

சா: வீட்டுக்குக்கொண்டு சென்று மேசை லாச்சியினுள் பூட்டிவைத்திருந்தேன்.

கே: முத்திரைகளை திருப்பி உதவி அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கும்வரை இதுபற்றி உமது தந்தைக்கு எதுவும் தெரியாதா?

சா: ஆம்.

கே: நீரும் உமது தந்தையும் ஒரே வீட்டிலேயே வசிக்கிறீர்கள்?

சா: ஆம்.

கே: முத்திரைகளை உதவிஅரசாங்க அதிபர் உமதுகடைக்கு வந்து பொறுப்பேற்ருரா? அல்லது நீர் அவரிடம் ஒப்படைத்தீரா?

சா; 9—1 81ல் நான் வங்கிக்குச் சென்றுவிட்டு மத்தியானம் கடைக்குவந்தேன். கடைபூட்டியிருந்தது, தந்தையார் அங்கு இருக்கவில்லை. அவர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு சென்றிருப்பதாக அறிந்தேன். நானும் அங்கு போனேன். அங்கு முத்திரைபற்றி என்னிடம் கேட்கப்பட்டது. அதையடுத்து வீட்டுக்குச் சென்று முத்திரைகளை எடுத்துவந்து உதவி அரசாங்க அதிபரிடம் கொடுத்தேன். எனது வாக்குமூலத்தையும் அவரிடம் அளித்தேன். தந்தையாரின் வாக்குமூலமும் அங்கு பதியப்பட்டது.

கே: உணவு முத்திரைகளை விட வேறு ஏதாவது பத்திரங்களையும் எதிரி உம்மிடம் தந்தாரா?

சா: இல்லை.

கே: உமது தந்தையிடம் கொடுத்தாரா?

சா: அதைப்பற்றித் தெரியாது.

கே: 16 உணவு முத்திரைகளின் பெறுமதி என்ன?

சா: தெரியாது.

நீதிபதி இக்கட்டத்தில் குறுக்கிட்டு 200 ரூபாவுக்கு மேல் அது பெறுமதியானது என்பதால் தானே 200 கொடுத்தீர்? என்று கேட்க சாட்சி "ஆம்" என்ருர்.

விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

எதிரிசார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜராஞர். காங்கேசன்துறை பொலிஸ் சார்ஜன்ட் தியாகராசா வழக்கை நடத்திஞர்.

## சுருவில் றே.க. பாடசாலை இல்லப்போட்டி

(ஊர்காவற்றுறை)

சுருவில்றேமன்கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலைஇல்ல விளையாட்டுப்போட்டி இம்மாதம் 20ம் திகதி சனிக்கிழமை பிற்பகல்நடைபெறவிருக்கின்றது.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு, பொன். கணேசன் மங்களவிளக்கேற்றி ஆசியுரை வழங்குவார். பாடசாலை அதிபர் திரு. பொ, சோமசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

பாடசாலை அதிபர் திரு. வை. தியாகராசா தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் பண்டிதர் சா. பொ. இரத்தினம் எம், பியும். உதவி அரச அதிபர் திரு. சி. பாலரத்தினமும் கெளரவ விருந்தினராகவும். மட்டக்களப்பு உதவி அரசாங்க அதிபர் திரு. எம். அந்தோனிமுத்து பிரதம விருந்தினராகவும் கலந்து கொள்வர். சேர் வை. து. ம, ம. வித்தியாலய அதிபர். திரு. செ. குணபாலசிங்கம் கொடியை ஏற்றிவைப்பார்.

பழைய மாணவர்களுக்கான நிகழ்ச்சிகளும் நடைபெறும். இந்நிகழ்ச்சியில் ஆண்கம் கயிறிளுத்தல், மரதனேட்டம், பெண்கள் சைக்கிள் ஓட்டம், பார்சல் பரிமாற்றம்: மற்றும் விநோத உடைப்போட்டி முதலியன இடம்பெறும். (அ)

புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## கேள்விப் பத்திரம்

எமது சங்க லொறியின் பழைய பொடி மற்றும் உதிரிப் பாகங்கள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனை செய்யப்படும். இதற்கான விலைக்கூறுகளை 27.3.82 அல்லது அதற்கு முன்னதாக பதிவுத் தபால் மூலம் "பொதுமுகாமையாளர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், புங்குடுதீவு" என விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும்.

என்வலப்பின் இடதுபக்க மூலையில் 'கேள்விப் பத்திரம்' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

பொருட்களைப் பார்வையிடுவதற்கும் மற்றும் மேலதிக விபரங்களுக்கும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்,
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
புங்குடுதீவு.

2572

## தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சி: ஆணைக்குழு நியமனம்

[கொழும்பு]

தொழில்நுட்பக்கல்விவளர்ச்சியில் தற்போதுள்ள வசதிகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவிருக்கிறது.

நீர்கொழும்பில் நேற்று நடந்த கூட்டமொன்றில், கல்வியமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

கிராமியப் பாடசாலைகளை முன்னேற்றுவதற்காகவேகல்வி வெள்ளை அறிக்கை கொண்டு வரப்பட்டதாகவும் அவர்தெரிவித்தார்.

நாடு முழுவதும் தொழில் நுட்பக்கல்வியை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார். (க)

## இந்திய பட்ஜட்

புதுடில்லி, மார்ச். 17

ராஜ்யசபாவில் வரவுசெலவு திட்ட விவாதம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மக்கள் குறை தீர்க்கும் முற்போக்கான பட்ஜட் என்று அரசாங்க உறுப்பினரும், ஏழ்மையையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழிக்க எவ்வித ஆலோசனைகளும் வழங்கப்படவில்லையென்று எதிர்க்கட்சியினரும் தெரிவித்தனர். (க)

## தீர்க்க தரிசன...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

திற்கு அரசிடம் இருந்து போதிய பணம் கிடைக்காததனுற் பல்கலைக்கழக நம்பிக்கை நிதி ஒன்று அமைக்க வேண்டும்எனச் சிந்தித்து அதற்குரிய பிரேரணை ஒன்றினையும் அனுப்பிவைத்திருந்தார், விவசாய பீடத்தைக் கிளிநொச்சியில் அமைப்பதாக இருந்தால் காலம் கழியும், எனவே திருநெல்வேலியில் இவ்வாண்டே தொடங்க வேண்டுமென்ற திட்டம் வகுத்திருந்தார். இவை செயற்படுமுன பரமேஸ்வரனடி சேர்ந்துவிட்டார். அவரின் மதிப்புமிக்க பங்களிப்பிற்காக நாம் அவரை நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

தமிழினம் பார்த்த அறிவு ஞானம் பெற்ற தங்கமான பெருமகனை இழந்து நிற்கின்றது நாம் பண்பான தொண்டனை இழந்து விட்டோம்.

## திருட்டு வழக்கில் எதிரிகள் விடுதலை

(சாவகச்சேரி)

தாவளை இயற்றாலை திருட்டு வழக்கில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி ஜனுப் எச், எம். காரியப்பர் முன்நிலையில் நடைபெற்றது.

இவ் வழக்கில் தாவளை இயற்றாலையைச் சேர்ந்த தம்பையா குணராசா ஆகியோர் அவ்வூரைச்சேர்ந்த கிருஷ்ணபிள்ளை செல்வலட்சுமியிடமிருந்து 3000ரூபா பெறுமதியான காப்பை கழற்றியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி வி செல்லத்தம்பு ஆஜராஞர். (க)

## தனிநபர் கமிஷன் விசாரிக்கும்

சென்னை, மார்ச், 17

கன்னியாகுமரி மாவட்ட சம்பவங்களை விசாரணை செய்ய தனிநபர் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சென்னை முன்னுள் உயர் நீதிமன்ற நீதிபதி திரு. வேணுகோபாலை இக்கமிஷன் உறுப்பினராக, தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் நியமித்துள்ளார்.

இக்கமிஷன், ஒரு வருட காலத்திற்கு முன்பிலிருந்து நடந்த சம்பவங்கள் பற்றி விசாரணை செய்வதுடன், இப்படியான சம்பவங்கள் இனிமேல் நடைபெறாமலிருப்பதற்கான வழிவகைகளையும் தெரிவிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது. (க)

## ஊறணி மக்கள் நன்றிகூறி பிரசுரம் வெளியிட்டனர்

(மாவிட்டபுரம்)

ஊறணியில் இடம்பெற்ற கொள்ளை முயற்சியை முறியடிக்க உதவிய பொதுமக்களுக்கு ஊறணிப் பங்கு மக்கள் நன்றி தெரிவித்துப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

ஊறணி புனித அந்தோனியார் கிராம அபிவிருத்திச் சங்கச் சம்பளப்பணம் 6 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவை துப்பாக்கி இளைஞர்கள் கொள்ளையிட முயன்றதும், பொதுமக்களால் அது முறியடிக்கப்பட்டதும் தெரிந்ததே.

இது குறித்து ஊறணிப் பகுகு பொதுமக்கள் வெளியிட்டுள்ள பிரசுரம் ஒன்றில், 'ஏழைத் தொழிலாளர்களின் சம்பளப் பணத்தைக் காப்பாற்றத் துப்பாக்கிகள் மத்தியிலும் எதிர்த்துநின்று கொள்ளையர்களையும், அவர்களது ஆயுதங்களையும் கைப்பற்றிய தொண்டர்களுக்கு எமது நன்றிகள்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாரதத்துக்கு சோவியத் தாராள உதவி

பம்பாய் மார்ச் 17

பாதுகாப்பு உட்பட சகல உதவிகளையும் சோவியத் யூனியன் பாரதத்துக்கு வழங்கும் என்று சோவியத் பாதுகாப்பு அமைச்சர் திரு. உஸ்ரனேவ் பம்பாயில் தெரிவித்தார்,

பம்பாய் கடற் தளத்தை பார்வையிட்ட அவர் தரமான பயிற்சிக்கு அது உரியதளமென்றும் தன்னை பெரிதும் கவர்ந்திருப்பதாகவும் கூறினர். (க)

### கேரளசட்டசபை கலைக்கப்பட்டது

சென்னை, மார்ச் 17

கேரளத்தில் ஐக்கிய முன்னணி அமைச்சரவை ராஜினுமா செய்ததையடுத்து கேரளசட்டசபை கலைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

கேரள அமைச்சரவைக்கு ஆதரவளித்துவந்த சட்டசபை உறுப்பினர்களிலொருவர் தனது ஆதரவை விலக்கிக் கொண்டதையடுத்தே, திரு. கருணுகரன் தலைமையிலான அமைச்சரவை ராஜினுமாச் செய்ததாக தெரிவிக்கப்பட்டது. (வெ)


### அரிய சந்தர்ப்பம்

DIPLOMA IN COMPUTER PROGRAMMING

பயிற்சி மீண்டும்ஒரு புதியவகுப்பு ஆரம்பம். 20-3-1982
பயிற்சிக்காலம் மூன்று மாதம். O/L அல்லது N.C.G.E.
படித்த இரு பாலாரும் சேரலாம். இன்றும் நாளையும்
(வியாழன், வெள்ளி) நேரில் வரவும்.

**நாஷனல் அக்கடமி**

(அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது)
11, மொம்சாக் கட்டிடம்,
ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 2582

### வேலைக்கு உடனே ஆட்கள் தேவை

கண்ணுடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள
பபுளர் (Bubblers) கெல்ப்பர் (Helpers)
புளோவர் (Blowers) போன்றவர்கள் தேவை.
அனுபவத்திற்கேற்ப நல்ல சம்பளம் கொடுக்கப்படும்.
அனுபவமுள்ள Bottle & Press Machine
இயக்குனரும், கெல்ப்பரும் தேவை.

உடனே நேரில் வரவும்,

**சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ்**

நீர்வேலி 2541


பல்கலைக்கழக மாணவர்

## விமலராஜாவை விடுதலைசெய்யக்கோரி யாழ்.பல்கலைக்கழகமாணவர்உண்ணுவிரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் வைத்து கைதுசெய்யப்பட்ட மாணவர் திரு. அ. விமலராஜாவை விடுதலைசெய்யக் கோரி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இன்று, வகுப்புகளைப் பகிஷ்கரித்து அடையாள உண்ணுவிரதமொன்றை நடாத்தவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ, விஞ்ஞான, நுண்கலை, கலைப்பீடங்களைச் சேர்ந்த மாணவர்களே இந்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

'திரு. விமலராஜாவை கைதுசெய்து ஒருவருடமாகிறது. இவரை விடுதலைசெய்யுமாறு கோரி ஜனுதிபதிக்கு 81 ஏப்ரல் 24, 82 பெப்ரவரி 10, 82 மார்ச் பதின்மூன்று ஆகிய திகதிகளில் கடிதமும் தந்தியும் அனுப்பிவைத்தும் இதுவரை எதுவித பதிலும் கிடைக்கவில்லை; ஆதலால் இதனை ஆட்சேபித்து அடையாள எதிர்ப்புத்தினமாக இந்த உண்ணுவிரதப் போராட்டத்தை நடாத்துகிறேம்'' என்று மாணவர் அவைத்தலைவர் திரு. கே. என். இராஜநாயகம் தெரிவித்துள்ளார்.

திரு. விமலராஜாவை விடுதலைசெய்யவும் அல்லது நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தவும் என்று கோரி பேராதனை பல்கலைக் கழக மாணவர் அவைகளும் வேண்டுகேள் விடுத்துள்ளதுடன், சர்வவளாக மாணவர் அவைத் தலைவர் திரு. ஆனந்தவும் ஜனுதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (மா)

### கொள்ளைப்பணம்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணைக்குட்படுத்தப்பட்டார்.

வேலணை ப. நோ. கூ. சங்கத்தின் காசாளரிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட சுமார் அறுபதினுயிரம் ரூபா ரொக்கப்பணத்தில் நேற்று மீட்கப்பட்ட ஐம்பதினுயிரம் ரூபா தவிர்ந்த மிகுதிப் பணமான பத்தாயிரம் ரூபா மேற்படி பெண்ணிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த பொன்ராசா புவனேஸ்வரி, காங்கேசன்துறைப் பொலிசாருக்குஅளித்த வாக்கு மூலத்தில்; ஊறணி கொள்ளை முயற்சியில் பொதுமக்களால் பிடிக்கப்பட்ட காசிப்பிள்ளை சுரேஷ்குமார் தமது உறவினர் என்றும், தம்மிடம் பத்தாயிரம் ரூபா ஒப்படைத்திருந்ததாகவும்; இப்பணத்துக்கு தாம் நகைகள் செய்து கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

தமது கணவர் வெளிநாட்டில் வேலைசெய்வதாகவும், தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பத்தாயிரம்ரூபாவையும் திருப்பித் தருவதாகவும் மேற்படி பெண் பொலிஸ் விசாரணையில் கூறியுள்ளார்.

இப்பெண்ணின் சகோதரி; குறிப்பிட்ட பத்தாயிரம் ரூபாவை உடனடியாச் செலுத்துவதாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த பெண் தொடர்ந்து பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

வடபகுதி கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பான இரகசியத் தகவல்கள் வெளியாவதற்குக் காரணமாகவிருந்த ஊறணி கொள்ளை முயற்சிச் சம்பவச் சம்பந்தமாக தொடர்ந்து தீவிரவிசாரணைகள் நடைபெற்றுவருகின்றன,

### ஊர்காவல்படை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்த்துக் கொள்ளப்படுவர். பொலிஸ், ஆயுதப்படை, நீதித்துறை போன்றவற்றில் சம்பந்தப்பட்டோர் இப்படையில் அங்கம் வகிக்கமுடியாது. அத்துடன் அதே மாவட்டத்தைச் சார்ந்தவர்களே அவ்வப்பகுதியில் நியமிக்கப்படுவர். வேறு மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் கிராம சேவை அலுவலர், உதவிஅரசாங்கஅதிபர் தொகுதி எம். பி. ஆகியோரின் சிபார்சுடன் தேவையானதகைமைகளையும் கொண்டிருந்தால் சேர்க்கப்படுவர்,

ஒவ்வொரு ஊர்காவல்படையினதும் பட்டியல் பொலிஸ் நிலைட்ங்களிலும் இருக்கும்.

நேற்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இவை ஆராயப்பட்டன. இத்தகவல்களை அமைச்சரவைப் பேச்சாளரான இராஜங்க அமைச்சர் திரு. ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் நிருபர்களிடம் தெரிவித்தார், [இ—ம]

(யாழ்ப்பாணம்)

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. அ. நவரட்ணம் இன்று காலை சிறப்புரையாற்றுவர்.

### ஒருநாள்............

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள்) அனுமதிக்கப்படாத நேரத்தில், பாதுகாவலரை—பொறுப்பான உத்தியோகத்தர்களைத் தாண்டி இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து யாழ். ஆஸ்பத்திரிப் பொலிஸ்பகுதிப் பொறுப்பதிகாரி ரி.எஸ்.பாலசுப்பிரமணியம் விசாரணை செய்து யாழ். பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவுக்கு அறிவித்ததைத் தொடர்ந்து சார்ஜன்ட் தில்லன்துரை தலைமையிலான பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

பொலிஸார் இதுவரை நடத்திய விசாரணைகளிலிருந்து சிசுவைக் கடத்தியவர்கள், இவர்கள் பிரயாணஞ்செய்த கறுப்பு நிறக் கார் பற்றிய தகவல்கள் விரைவில் வெளியாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. (மா)

## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 13 - 02 - 1922 |  | 16 - 03 - 1982 |

**கதிர்காமசேகரம்பிள்ளை துரைராசசிங்கம்**
**பங்காளர்:- சி.அ. அம்பலம்பிள்ளை அன் கோ மன்னர்**
**முருகானந்தா ஸ்ரோர்ஸ் அடம்பன்**

இணுவில் காலம் சென்ற கதிர்காமசேகரம்பிள்ளை சின்னத்தங்கம் அவர்களின் மூத்த புதல்வரும் சீனியம்மாவின் அன்புக்கணவரும் தனபாலன் (டுபாய்) நடராசா (ஜேர்மனி) பாலசேகரம், நகுலாதேவி சந்திரசேகரம், குகரஞ்சனியின் அன்புத்தந்தையாரும்; திருவிளங்கம் (மாவட்டநீதிமன்றம் — மன்னர்) ரதி [டுபாய்] ஆகியோரின் மாமனுரும், இணுவில் தெற்கு வைத்திலிங்கம் சுப்பையா, சரஸ்வதியின் மருமகனும், வைத்திலிங்கம் [அடம்பன்] பொன்னம்பலம் [அசோகா பாம் — சுன்ணுகம்) தருமலிங்கம் (ஸ்ரீ ஹரன்மில்ஸ் சுன்ணுகம்) குமாரசாமி (ஜேர்மனி) இராசம்மா, நாகம்மா, பத்மாதேவியின் மைத்துனரும் பூபாலசிங்கம், வள்ளிப்பிள்ளை, இராசமணி, சிவயோகம், இராசமலர் ஆகியோரின் சகோதரரும், அருளம்பலம், திருச்செல்வம், இராசரத்தினம் ஆகியோரின் சகலனுமாவார். ஈமக்கிரிகைகள் 18 — 03 — 1982 வியாழக்கிழமை (இன்று) பிற்பகல் 2—00 (பி ப.) அளவில் தாவடி மயானத்தில் நடைபெறும். உற்ருர், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றேம்.

அறிவிப்பாளர்
சு. பொன்னம்பலம்.
(மைத்துனர்)

இணுவில் — தெற்கு,
17 — 03 — 1982. 2585


**JVC** இலங்கை மக்களின் நம்பகரமான பெயர்

**ஜேவிசி வர்ண-கறுப்பு-வெள்ளை**

தொலைக்காட்சிப் பெட்டிகள் சகல விலைகளிலும் விற்பனைக்கு வந்துள்ளன.

உங்கள் தேவைகளை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்

**மகாராஜா இன்ட்வெஸ்மென்ட் லிமிட்டெட்,**

122, கே. கே. எஸ். வீதி -- யாழ்ப்பாணம்
போன்: 8267.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் மார்ச் மீ 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper. The General P.O. Sri Lanka. Regd. Q. B. 100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 77 07, 889, 8126.